எங்கே... எங்கே...
எங்கே...
J.சாம்ஜெபத்துரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

எங்கே? எங்கே? எங்கே?

(WHERE? WHERE? WHERE?)

Rethnabai Sathyanesan

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர் :
J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை—600 024

எமது புதிய வெளியீடுகளை வாசித்தீர்களா ?

	புத்தகத்தின் பெயர்	ரூபாய்	
33.	தேன் சுவைக் கதைகள்	5	00
34.	அபிஷேகியும் ஆண்டவரே!	5	00
35.	மகிமையான கிறிஸ்துவின் வருகை	5	00
36.	என் நேசரே தீவிரியும்!	5	00
37.	தேவ சித்தத்தை அறிந்து கொள்வது எப்படி?	5	00
38.	எங்கே? எங்கே? எங்கே?	5	00
39.	திறவு கோல்!	5	00
40.	சிறு சிறு செய்திகள்	5	00
41.	நிமிடச் செய்திகள்	5	00
42.	நீண்ட நேரம் ஜெபத்தில்...!	5	00
43.	ஜெபமும் எழுப்புதலும்	5	00
44.	தடைகளைத் தகர்ப்பவர்	5	00
45.	வஞ்சக சாத்தான்	5	00
46.	உன்னைச் சந்திக்கும் காலம்	5	00
47.	உன்னதத்தில், உயர் ஸ்தலத்தில்	5	00
48.	THE FOURTH DIMENSION (Paul Yonggi Cho)	30	00
49.	ஜெய ஜீவியம் (பால் யாங்கி சோ)	15	00
50.	BORN TO SUCCEED ஜெயம் நமதே (பால் யாங்கி சோ)	5	00
51.	பிரச்சனைகளை வெல்லுங்கள் (பால் யாங்கி சோ)	15	00
52.	தெளிதேன் துளிகள் பாகம் I	15	00
53.	தெளிதேன் துளிகள் பாகம் II	15	00
54.	கர்த்தர் உண்மையுள்ளவர் !	5	00
55.	பிசாசைத் துரத்துங்கள்!	5	00
56.	இறுதிக்கால நிகழ்ச்சிகள் !	5	00
57.	நடிகர் வாழ்வில்	5	00
58.	உன் பெலனை ஸ்திரப்படுத்து !	5	00
59.	கர்த்தர் பெரியவர்	5	00
60.	சிறு கதைகளும் பிர. குறிப்புகளும் பாகம் III	5	00
61.	அன்றன்றுள்ள அப்பம் (ஆண்டு சந்தா)	20	00

அர்ப்பணம்!

என் அன்பின் சொரூபியான இயேசு,
பாதாளத்திற்கு என்னைத் தப்புவித்தார்!
நரகக் கடலினின்று மீட்டார்!
தம்மோடு என்னை அணைத்துக் கொண்டார்!
அவர் அன்புக்கு என்னையே அர்ப்பணிக்கிறேன்.

பொருளடக்கம்

அத்தியாயம்		பக்க எண்
1.	ஆயத்தப்படு	5
2.	24 மணி நேரங்கள்	9
3.	தவருன எண்ணங்கள் !	14
4.	கர்த்தர் எழுப்பினுர் !	22
5.	பிரசங்கியுங்கள் !	29
6.	பயணமா ?	35
7.	அந்த ஐசுவரியவான்	37
8.	சடுதியிலே, எச்சரிப்பின்றி!	51
9.	கசப்பான உண்மைகள் !	58
10.	நரகத்தில் மாநாடு !	67
11.	உனக்காக இயேசு !	71

அத்தியாயம் 1

ஆயத்தப்படு!

''மரணத்தைக் காணுமல் உயிரோடிருப்பவன் யார்? தன் ஆத்துமாவைப் பாதாள வல்லடிக்கு விலக்கி விடுகிறவன் யார்? (சங். 89:48).

பூமியிலுள்ள முழு வாழ்க்கையும் ஒரு ஆயத்த வாழ்க்கை தான். மரணத்திற்குப்பின் உள்ள நித்திய வாழ்க்கையைச் சந்திக்க ஒவ்வொருவரும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுகிற மிகச் சிறிய வாழ்க்கை இது! அநேகர் இந்த இரகசியத்தை நினைத்துப் பார்ப்பதேயில்லை!

தாயின் வயிற்றிலுள்ள குழந்தையின் வளர்ச்சி நாள் பத்து மாதம் மட்டுமே! அது, பிறப்பதற்கு முன் உள்ள சிறு ஆயத்த வாழ்க்கை! பின்பு மனிதனுய் பிறக்கும்போது அறுபது வருடமோ, எண்பது வருடமோ வாழும் வாழ்க்கையும் மெய்யான வாழ்க்கையல்ல. இதுவும் மிக வேகமாக ஓடி மறையும் பொய்யான வாழ்க்கைதான்! நம் உண்மையான வாழ்க்கை நித்தியத்தில்தான் ஆரம்பிக்கிறது!

ஒரு வண்ணத்துப்பூச்சி, முட்டையாகவும், இலைகளைச் சாப்பிடும் புழுவாகவும் ஜீவித்தாலும், அவை யாவும் ஆயத்த வாழ்க்கையே! சிறகடித்துப் பறக்கும் வாழ்க்கைக்கு முன்னதான ஆயத்த வாழ்க்கை!

நம்மைச் சூழ அநேகர் வாழ்ந்து, மரித்து நிமிடம் தோறும் நித்தியத்திற்குள் கடந்து செல்கிறுர்கள். பயங்கரமான விபத்துக்கள், கொடிய நோய்கள், இனக் கலவரங்கள் மக்களை வாரிக்கொண்டு போகிறது! யுத்தங்கள் வந்து விட்டாலோ, மனித உயிர் அற்பமாய் எண்ணப்பட்டு கோடிக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்படுகிறுர்கள். மரணத்திற்குப்பின் அவர்கள் நிலை என்ன என்று நினைப்பாரில்லை.

நமக்கு அருமையானவர்களை இழக்கும்போது, பிரிவின் துயரம் தான் அதிகமாக நம் சிந்தனையை ஆட்கொள்ளுகிறது! அதற்குப் பின் அவர் விட்டுச் சென்ற பொறுப்புகளை யார் யார் எடுப்பது? சொத்துக்கள், நகைகளை எப்படி பாகம் பிரிப்பது? என்று தான் மூளையைக் கசக்கி கவலை கொள்ளுகிறோமே தவிர, மறைந்த ஆத்துமா நித்தியத்தை எங்கே செலவழிக்கும்? நமது நித்திய வாழ்க்கைக்கு நாம் ஆயத்தம் தானு என்று எண்ணுகிறதே இல்லை!

பூமியில் தொடர்ந்து உயிர் வாழ நாம் எவ்வளவோ முன்னேற்பாடு எடுக்கிறோம். டாக்டருக்குச் செலவழிக்கிறோம், வியாதிகளைக் கட்டுப்படுத்த மாத்திரை மருந்துகளை விழுங்குகிறோம். நம் குழந்தைகளுக்கு ஒரு சிறு கஷ்டம் என்றாலும் ஆஸ்பத்திரிக்கு தூக்கிக் கொண்டு ஓடுகிறோம். எல்லாம் நல்லது தான்! ஆனால் நித்தியத்தைச் சந்திக்க நாம் என்ன ஆயத்தம் செய்கிறோம்? பூமியிலுள்ள கொஞ்சம் சரீரப்பாடுகளை நீக்க அவ்வளவு அலையும் நாம், நித்திய ஆக்கினையாகிய நரகத்திற்கு நீங்கலாக என்ன முயற்சி எடுக்கிறோம்? சிந்தித்துப் பாருங்கள்!

சாத்தான் செய்கிற ஒரு பெரிய தந்திரம் என்னவென்றால், நித்தியத்தைக் குறித்து சிந்திக்க விடாமல் நம் கண்களை மறைப்பது தான்! ஆயத்த வாழ்க்கையாகிய இந்த சிறு வாழ்க்கையின் கவலைகளையும், பிரச்சனைகளையும் மிகப் பெரிதாக்கி, அதையே எண்ணி துயரம் கொள்ளச் செய்து தந்திரமாய் நம் மனக்கண்களைக் குருடாக்கிப் போட்டு விடுகிறான்!

பகலிலே நட்சத்திரங்களை நம்மால் பார்க்க முடிவதில்லை! ஆகாயத்தில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் அழகாய் மின்னிக்கொண்டிருக்கின்றன. ஆனால் பகலில் அவை நம் கண்களுக்குத் தெரிவதில்லை. அதற்காக பகலில் வான மண்டலத்தில் நட்சத்திரங்களே இல்லை என்று சொல்லிவிட முடியாது! நட்சத்திரங்களோடு ஒப்பிடும் போது சூரியன் மிகச் சிறியது தான்! ஆனால் அது நம் அருகில் இருப்பதால் தன் ஒளியை

பிரகாசமாக வீசி நட்சத்திரங்களை மறைக்கிறது. எவ்வளவு காலம் இப்படி மறைக்கும்? தான் அஸ்தமிக்கும் வரை தான். அதன் பின்பு இருள் சூழும்போது பரந்து விரிந்த வானத்துத் திரையின் மேல் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் மாணிக்கக் கற்களைப் போல் மின்னுகிறதைக் காணலாம். அப்படியே இந்த உலகத்தின் பாடுகள், கவலைகள் மிக அருகிலிருந்து கொண்டு நட்சத்திரம் போன்ற நித்திய ஆசீர்வாதங்களைக் காண முடியாதபடி நம் கண்களைத் தடுக்கிறது! வாழ்க்கையாகிய சூரியன் அஸ்தமிக்கும் போதுதான் நித்தியத்தை மனிதன் காண்கிறான்.

இன்றைக்கு நித்தியத்தைக் குறித்துப் பேச பிரசங்கிகளில்லை! நரகத்தைக் குறித்து பிரசங்கித்தால் தங்கள் பேர் புகழ் போய் விடும், பணம் கிடைக்காது என்று எண்ணி பூசி மெழுகியே பேசிவிடுகிறார்கள். வயிற்று வலி, காய்ச்சல் குணமாவதையே மேடை வித்தையாக்கி, விளம்பரமாக்கி, எரியும் அக்கினிச் சூளையை தற்காலிக திரைபோட்டு மூடி விடுகிறார்கள்.

சுவிசேஷகனுடைய முதல் வேலை, நரகக் கடலுக்குப் போய்க் கொண்டிருக்கும் மக்களை கண்ணீரோடும், பாரத்தோடும் தடுத்து நிறுத்துவது தான்! உளையான பாவச் சேற்றிலிருந்து தூக்கி எடுப்பது தான்! கொடூரமான சாத்தானின் இரும்புப் பிடியிலிருந்து ஆத்துமாக்களை விடுவிப்பதுதான்!

ஐயோ, அறியாமையினாலே ஜனங்கள் சீர்கெட்டுப் போகிறார்களே! நித்திய தரிசனமின்றி வாழ்கிறார்களே! நம்பிக்கையின்றிச் சீரழிகிறார்களே! அவர்களைத் தூக்கியெடுப்பார் யார்?

சிலருக்கு ''தற்கொலை" என்றால் மிகச் சாதாரண சொல்லாயிருக்கிறது! கணவனிடம் கொஞ்சம் சண்டை வந்து விட்டால் தற்கொலை செய்து கொள்கிறேன் என்று ஓடுகிறார்கள்.

எனக்கு வரும் கடிதங்களில் ஏராளம் அப்படிப்பட்ட வார்த்தைகளை சுமந்து கொண்டு வருகிறது. ஐயா, எங்களுக்கு

கடன் தொல்லை மிக அதிகம்; கடன் கொடுத்தவர்கள் பேசும் வார்த்தைகள் எங்கள் உள்ளத்தைப் பிழிகிறது; நாங்கள் குடும்பமாய் தற்கொலை செய்து கொள்ளலாம் என்றிருக்கிறோம்...ஐயா, என் கணவர் எனக்குத் துரோகம் பண்ணி விட்டு வேறொரு பெண்ணோடு வாழ்கிறார்; என்னால் தாங்க முடியவில்லை. தற்கொலை செய்து கொள்ளலாம் என்றிருக்கிறேன்...ஐயா என் வேலையில் மிக கஷ்டம்; என் மேலதிகாரி என்னை அவர் இச்சைக்கு இணங்கும்படி அழைத்தார்; நான் இணங்காததால் என்னை பல்வேறுகுற்றஞ்சாட்டி சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறார். தற்கொலை செய்து விடலாமா என்றிருக்கிறேன்...ஐயா, நான் இளம் விதவை. என் அன்புக் கணவன் விபத்துக்குள்ளாகி மறைந்ததை என்னால் தாங்க முடியவில்லை. தற்கொலைதான் என் துயரத்திற்கெல்லாம் ஒரு தீர்வு என்று எண்ணுகிறேன் என்றெல்லாம் எழுதுகிறார்கள்.

தற்கொலை, துயரங்களுக்கெல்லாம் முடிவல்ல. பூமியில் அனுபவிக்கும் துயரங்களைப் பார்க்கிலும் கோடி கோடி மடங்கு அதிகமான துயரங்களின் ஆரம்பமாகும். பூமியில் நீ அனுபவிக்கும் பாடு, நீ நரகத்தில் அனுபவிக்கும் பாடுகளோடு ஒப்பிடக் கூடியதல்ல.

"கொலை செய்யாதிருப்பாயாக!" என்ற கட்டளைதான் தற்கொலை செய்யாதிருப்பாயாக என்பதற்கும் பொருந்தும். உன்னை நீயே கொலை செய்வது எத்தனை கொடூரமானது! காலத்திற்கு முன்னே நீ ஏன் சாகவேண்டும்? என்று வேதம் கேட்கிறது! தேவபிள்ளையே, எவ்வளவு பெரிய பிரச்சனையானாலும் அதற்கு கிறிஸ்துவிடம் தீர்வு உண்டு. எத்தனை பெரிய துயரமானாலும் அதற்கு கிறிஸ்துவிடம் ஆறுதலும், விடுதலையுமுண்டு! சோர்ந்து போகாதே!

பூமியில் உனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு நிமிடமும் நித்தியத்திற்கு நீ ஆயத்தமாக கர்த்தர் கொடுக்கும் பொன்னான தருணங்கள்! நீ அதை எப்படிச் செலவழிக்கப் போகிறாய்?

அத்தியாயம் 2

24 மணி நேரங்கள்!

ஒரு சுரங்கத் தொழிலாளியின் பிரேதத்தைஆஸ்பத்திரிக்குச் சுமந்து கொண்டு வந்தார்கள். அவன் சரீரத்தில் பல இடங்களில் காயங்கள் இருந்தன. கால் முறிந்து தொங்கியது! சுரங்கத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது அந்தப் பகுதி இடிந்து விழுந்ததால் உள்ளே சிக்கி மரித்துப்போனான். அடுத்த நாள் அரசாங்க டாக்டர் அவனை சோதித்துவிட்டு அவனைப் புதைத்துவிடும்படி கூறிவிட்டார்.

அவனோடு சேர்ந்த மற்ற சுரங்கத் தொழிலாளிகள் பிரேதப் பெட்டியை சுமந்து கொண்டு புதைக்கச் சென்ற போது, திடீரென்று பெட்டி விழுந்து விடவே, அந்தப் பிரேதம் அசைந்து மரித்த மனிதன் கண்களைத் திறந்தான். தண்ணீர் என்ற பாவனையில் தன் விரல்களைக் காட்டவும், டாக்டரை அழைத்தார்கள். அவருக்குத் தாங்க முடியாத ஆச்சரியம்! மருத்துவ விதியின்படி நீ மரித்துப்போய் இருந்தாயே, எப்படி உனக்குள் மீண்டும் உயிர் வந்தது? என்று கேட்டார். மட்டுமல்ல, அவனுக்கு தீவிர சிகிச்சையளித்து முற்றிலும் குணமடையச் செய்தார்.

அவன் சொன்னான், "ஐயா, என் பெயர் ஜார்ஜ் லெனாக்ஸ். அன்று நான் சுரங்கத்திற்குள் நுழையும்போதே என்னை அறியாத ஒரு பயம் என்னை ஆட்கொண்டது. எனக்கு ஏதோ ஒரு விபத்து சம்பவிக்கப் போகிறது என்று என் உள்ளுணர்வுகள் உணர்த்திற்று. என் மேலதிகாரிகளிடம் சென்று அந்த சுரங்கத்தில் நான் வேலை செய்யும் பகுதி பாதுகாப்பாயிருக்கிறதா என்று கேட்டேன். அதற்கு அவர்களோ என் மேல் கோபப்பட்டு, எல்லாம் நன்றாய்தான் இருக்கிறது, போய் ஒழுங்காக வேலையைப் பார் என்று எரிந்து விழுந்து அனுப்பி விட்டார்கள்.

ஏறக்குறைய ஒரு மணி நேரம்தான் நான் சுரங்கத்தில் வேலை செய்திருப்பேன். அதற்குள் திடீரென்று இமைப்பொழுதில் நான் வேலை செய்த பகுதி இடிந்து விழுந்து என்னை மூடிக் கொண்டது. அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

மறு நிமிடம் நான் வேறு ஏதோ உலகத்தில் இருப்பதைப் போல இருந்தது. ஓர் ஆற்றின் மறு கரையில் இரண்டு பாதைகள் செல்லுமிடத்தில் இருண்ட இடத்தில் நின்று கொண்டிருந்தேன். ஒரு பாதை மிகப் பெரிய அகலமான பாதை. அநேகம்பேர் அந்த பாதையின் வழியாகச்சென்றிருந்திருக்க வேண்டும். ஏராளமான காலடி தடங்கள் தெரிந்தன. வேறு திசையில் சென்ற மற்ற பாதையோ சிறியதாக, ஒரு சிலரே செல்லக்கூடிய தாக இருந்தது.

என் உள்ளுணர்வின்படி நான் அகன்ற பாதையைத் தெரிந்து கொண்டேன். கொஞ்ச தூரம் செல்வதற்குள் ஒரு கரிய உருவம் என்னைச் சந்தித்தது. மிக கருப்பாக, வெளவால் போன்ற செட்டைகளோடு ஏறக்குறைய பத்து அடி உயரமுள்ள அந்த உருவம் மிகவும் அருவருப்பாய் இருந்தது. முகம் மனித சாயலில் இருந்தாலும், மூக்கு மிகப் பெரியதாகவும் தட்டையாகவும், அகோரமாகவும் இருந்தது. மகாக் கொடூரமாகவும், பயங்கரமாகவும் இருந்த அவனது தோற்றம் என்னை நடுங்கச் செய்தது. திகிலும், வேதனையும் என்னைச் சூழ்ந்தது. என் கரத்தைப் பிடித்து காரிருளின் பாதையிலே கொண்டு சென்றான். விலங்கிடப்பட்ட கைதியைப்போல வாய் பேசாமல் அவனுடன் சென்றேன். ஐயோ! என்னை எங்கு கொண்டு போகிறான்? இவன் என்ன செய்யப் போகிறான்? இவன் தான் லூசிபராக இருப்பானோ? என்றெல்லாம் கலங்கினேன். அவன் கண்கள் தீப்பிழம்பைப்போல இருந்தது. கையில் வேலாயுதத்தை வைத்திருந்தான். அவனைத் திரும்பிப் பார்க்கவும் எனக்குப் பிரியமில்லை.

ஒரு பெரிய மலையின் அடிவாரத்திற்கு வந்துசேர்ந்தோம். ஒரு குகையின் இரும்பு வாசலுக்கு அருகில் வந்ததும் அவன்

தன் வேலாயுதத்தால் தரையில் மூன்று முறை குத்தினன். உடனே அது திறந்து கொண்டது. உள்ளே கும் இருட்டாக காரிருளாக இருந்தது. அதற்குள் நுழைந்ததும், கோடிக் கணக்கான மக்களின் கூக்குரல், அழுகுரல், ஐயோ என்கிற கதறல் என் இருதயத்தை நின்று விடச் செய்வது போலி ருந்தது. தாங்க முடியாத வலியினலும், வேதனையினலும் பற்கடிப்பும், பெருமூச்சும் என் காதுகளை கிழிப்பது போன் றிருந்தது. ஒரு கோடிப்பேர் ஒரே நேரத்தில் தண்ணீர், தண்ணீர் என்று ஓலமிட்டுக் கொண்டிருந்தனர். அந்த இடத்தி லிருந்து தப்பி ஓடலாமென்றிருந்தேன். ஆனல் எங்கே போவது, எப்படிப் போவது என்று தெரியவில்லை. எல்லா இடங்களிலும் காரிருள்தான்!

அந்த நேரத்தில் வேறொரு பிசாசு என்னைப் பொறுப் பேற்றுக் கொண்டது. முந்தைய பிசாசு திரும்பிச் சென்று மரணமடையும் மக்களின் ஆத்துமாவைக் கூட்டி வரப் போய் விட்டது. புதிதாக பொறுப்பேற்ற பிசாசு இன்னும் பயங்கர மாயிருந்தது. அதன் கையில் பெரிய கூர்மையான வாள் இருந்தது. அது என்னிடம் அருவருப்பான குரலில், "நீ இப்பொழுது நரகத்தில் தள்ளப்படப்போகிருய், உனக்கு இனி எந்த நம்பிக்கையோ, எந்த மகிழ்ச்சியோ, ஆறுதலோ கிடையாது. நரக அக்கினி ஜுவாலையில் நீ என்றென்றும் வேதனைப்படுவாய். இனி ஒரு கதவு திறக்கப்படும்போது நீ பாதாளத்தில் விழுந்து அங்கு கொந்தளிக்கும் அக்கினி கடலில் பங்கடைவாய்" என்றது. அந்த வார்த்தைகள் இன்னும் ஆயிரம் மடங்கு என்னை நடுங்கச் செய்தது. நான் அடைந்த பயத்தையும், வேதனையையும், கலக்கத்தையும் வார்த்தையால் வர்ணிக்கவே இயலாது. என் பெலன்கள் என்னை விட்டு நீங்கியது, பெலவீனமாய் தள்ளாடி நடுங்கிக் கொண்டேயிருந்தேன். மயக்கம் போன்ற நிலையில் அந்த காரிருளில் செய்வதறியாது திகைத்தேன். நரகக் கடலில் போய் விழ எனக்குக் கொஞ்சமும் பிரியமில்லை.

நான் நின்ற அந்த இடத்திலிருந்து என் கண்களை உயர ஏறெடுத்தபோது அங்கே மிக மிக உயரத்தில் மிக அழகான

இனிமையான பட்டணம் என் கண்களில் தெரிந்தது! எனக்கு எட்டாத உயரத்தில், தூரத்தில் பரலோகம் இருந்தது. ஆ! அதனுடைய அழகின் சௌந்தரியத்தை வார்த்தையால் விவரிக்க முடியாது. பொன் ஒளி வீசும் அந்த நகரத்தில் எத்தனை அழகு வண்ணங்கள் பளிச்சிடுகின்றன. எத்தனை அருமையான பூக்களும். மலர்களும், பறவைகளும் நிரம்பி யிருக்கின்றன. ஆயிரக்கணக்கான அழகிய தேவதூதர்கள் இனிமையாய் பாடிக்கொண்டிருந்தார்கள். அங்கு துதிக்கும் லட்சக்கணக்கான மக்களுக்குள் திடீரென்று என் அருமைத் தாயாரைப் பார்த்தேன். ஆ! அவர்கள் எவ்வளவு உற்சாக மாய், எவ்வளவு மகிழ்ச்சியாய் கர்த்தரைத் துதித்துக்கொண் டிருந்தார்கள். அவர்களால் என்னை இந்த சூழ்நிலையில் பார்க்க முடியுமோ என்னவோத் தெரியவில்லை. அவர்கள் பூமியில் இருக்கும்போது எத்தனை முறை என்னிடம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தினார்கள்! எத்தனை முறை கண்ணீரோடு ஆலோசனை சொன்னார்கள்! அத்தனையையும் நான் ஏற்றுக் கொள்ளாமல் திருடுவதிலும், குடிப்பதிலும் ஊறிப்போயிருந்தேனே ... ஐயோ, கிருபை யின் தருணங்களையெல்லாம் நான் பாழாக்கினேனே... மனம் கசந்து புலம்பி அழுதேன்.

மறுநிமிடம் எனக்கு எதிரேயிருந்த பெரிய இரும்பு வாசல் மிக சத்தமாய் திறந்து கொண்டது. நான் உள்ளே பார்த்தபோது நான் கண்ட காட்சி என் உள்ளத்தைப் பிழிந்தது.

பயங்கரமான அலைவீசும் அக்கினிக்கடல் கொந்தளித்துக் கொண்டேயிருந்தது, அதன் அலைகள் மிக உயரத்திற்கும், மிக, மிக ஆழத்திற்குள்ளும் எழும்புவதும், தாழ்வதுமா யிருந்தது. தாங்க முடியாத இரைச்சலும், புலம்பலும் கேட்டுக் கொண்டே இருந்தது. மக்கள் அந்த அக்கினி அலை களில் மேலும் கீழுமாக அலைக்கழிக்கப்பட்டார்கள். ஐயோ, அந்த வேதனை சொல்லி முடியாதது! என் கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் அந்த அக்கினிக்கடல் நீண்டு மிகப்பெரி தாய் கொந்தளித்துக் கொண்டேயிருந்தது. அந்தக் கடலில்

ஜனங்கள் கோடிக்கணக்காய் புழுக்களைப் போல நெளிந்து தவித்து: ஐயோ, ஐயோ என்றும், தண்ணீர், தண்ணீர் என்றும், வேகிறதே, வேகிறதே என்றும் ஓலமிட்டுக் கொண்டிருந்தார்கள். போதாத குறைக்கு கோடிக்கணக்கான அசுத்த ஆவிகளும், தேள்களும், பாம்புகளும் அவர்களை வாதித்தன. வாதிக்கப்பட்ட ஜனங்கள் தேவனை சபித்தார்கள். நரக கடல் அலைகளின் சத்தமும், வேதனைப்பட்ட மக்களின் கூக்குரலும் இடைவிடாமல் கேட்டுக் கொண்டேயிருந்தது! நரக அலைகள் ஓய்வதில்லை!

நான் நின்ற நரக வாசலின் மேல், "நித்திய அக்கினி நித்தியம் முடிவதில்லை" என்று எழுதப்பட்டிருந்தது. அப்பொழுது ஒரு காந்த சக்தி என்னை ஈர்ப்பதைப் போலிருந்தது. அலறிக்கொண்டு மகா பாதாளத்திற்குள்ளிருக்கிற அந்த அக்கினி கடலை நோக்கி தலை கீழாக விரைந்து சென்று விழுந்தேன்.

அந்த நேரம் தான் என் சவப்பெட்டி கீழே விழுந்தநேரம்! ஒரு நிமிடம் நான் பூமியில் இருக்கிறேனா அல்லது நரகத்திலிருக்கிறேனா என்று தெரியவில்லை. கண்களைத் திறந்தேன். ஆஸ்பத்திரியில் இருந்தேன். என் சுய உணர்வு வர பல நிமிடங்கள் பிடித்தது. உடனேயே, அந்த இடத்திலேயே, இயேசுவுக்கு என் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தேன். இனி நான் ஒரு உண்மைக் கிறிஸ்துதவனாக வாழ்வேன். உண்மைக் கிறிஸ்தவனாக கிறிஸ்துவுக்குள் மரிப்பேன்''.

அக்கினியிலிருந்து தப்புவிக்கப்பட்ட கொள்ளியைப் போலிருந்த ஜார்ஜ் லெனக்ஸ், பூரண சுகமடைய ஆறு மாதங்கள் சென்றது. சுரங்கத்தின் இடிபாடுகளால் முறிந்து போன அவனுடைய கால்களின் எலும்புகள் மீண்டும் ஒன்று கூடியது! கர்த்தர் அவனுக்கு ஆச்சரியமாய் ஜீவனைக் கூட்டி கொடுத்து நம்மை எச்சரித்திருக்கிறார்.

நரகத்தின் வாயிலிருந்து தப்புபவர்கள் இலட்சத்தில் ஒருவர் தான்! மீண்டும் அவர்கள் நரகத்திற்குச் செல்ல விரும்புவார்களோ? தேவ பிள்ளையே, இவரது சாட்சி உனக்கு ஒரு எச்சரிப்பாக இருக்கட்டும்!

என்ன என்று சற்று சிந்திப்பாயா?

அத்தியாயம் 3

தவருன எண்ணங்கள்!

நரகத்தைப் பற்றி எண்ணவிடாமல் சாத்தான் பார்த்துக் கொள்ளுகிறது மட்டுமல்ல, எண்ணுகிறவர்களின் உள்ளத்தில் தவருன போதனைகளைப் புகுத்தி, நவீன உபதேசங்களைக் கொடுத்து வஞ்சிப்பதில் தான் எத்தனை பெரிய தந்திரம்!

1. நரகம் உண்டா?

சென்னையிலுள்ள ஓர் ஆலயத்தில் ஜெபிக்கச் சென்ற போது, அங்கிருந்த ஒரு குருவானவர் நரகம் இல்லை என்று வாதிட்டது எனக்கு மிகப்பெரிய ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருந்தது. வேதத்தில் நரகத்தைப் பற்றி வரும் பல பகுதிகளைக் காண்பித்த போதும், அவர் ஏற்றுக்கொள்ள தயாராயில்லை. ஏன் நரகத்தைப் பற்றி பேசவேண்டும்? மோட்சத்தைப் பற்றியே பேசு என்ருர்.

நல்லது, மோட்சத்தைப் பற்றி பேசுவது நல்லதுதான்; அதே நேரத்தில் நரகத்தைப் பற்றி எச்சரிக்க வேண்டியதும் நமது கடமையல்லவா? எதிரே உள்ள படுகுழியைப் பற்றி எச்சரிக்காமல் தூரத்திலுள்ள மாளிகையைப் பற்றிவிவரித்து என்ன பயன்?

இயேசு கிறிஸ்து ஒரு நரகப் பிரசங்கி! அதிகப்பிரசங்கியும் கூட! ஆம், மோட்சத்தை விட நரகத்தைத்தான் அதிகமான இடங்களில் பிரசங்கித்திருக்கிருர். அவர் மோட்சத்தைக் குறித்து 24 முறையும், நரகத்தைக் குறித்து 56 முறையும் பேசியிருக்கிருர்! அவரது முதல் பிரசங்கத்திலும் (மத் 5:29,30), கடைசிப் பிரசங்கத்திலும் (மத் 23:33) நரகம் இடம் பெற்றிருக்கிறது! எந்த வேதாகமக் கல்லூரிகளின் நவீன போதனைகளும் அதை மறைக்கவோ! மறுக்கவோ! மறுதலிக்கவோ முடியாது!

சாபங்களைக் குறித்துப் பேசாமல் வெறும் ஆசீர்வாதங்களைப் பற்றி மட்டும் பேசினால் ஆசீர்வாதத்தின் மேன்மை தெரியாது! மட்டுமல்ல, அது நிறைவும் பெறாது! ஆகவே, வேதம் எப்பொழுதுமே இரண்டு பகுதியையும் விளக்கி நலமானதைப் பிடித்துக் கொள்ளும்படி போதிக்கிறது!

உதாரணமாக, உபாகமம் 28 ஆம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். அதில் ஆசீர்வாதங்களும்,சாபங்களும் இடம் பெறுகின்றன. கர்த்தருக்குக் கீழ்ப்படிவதால் வரும் 27 ஆசீர்வாதங்கள் மொத்தம் 14 வசனங்களில் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் கர்த்தரை விட்டு தூரப்பட்டு கீழ்ப்படியாமல் போகும்போது வரும் 112 கொடிய சாபங்கள் 54 வசனங்களில் இடம் பெற்றிருக்கின்றன!

அப்படியே வேதம் மோட்சத்தைப் பற்றிப் பேசுவதை விடவும் மிகவும் அதிகமாக நரகத்தைப் பற்றியே எச்சரிக்கின்றது. வேதத்தின் மூன்றிலொரு பகுதி பாவத்தினால் வரும் தண்டனையைப் பற்றித்தான் பேசுகிறது! எச்சரிப்பின் சத்தங்களை ஆங்காங்கே நாம் கேட்கலாம்.

நியாயத்தீர்ப்பின் நாள் வருகிறது!
சூளையைப் போல் எரியும் நாள் வரும்!
காரிருள் பூமியைச் சூழும் காலம் வரும்!
ஒருவனும் கிரியைச் செய்யக்கூடாத காலம் வருகிறது!

வேத புத்தகம், உபதேசங்களை சமநிலைப்படுத்துகிறது. உதாரணமாக, அது தேவ அன்பைக் குறித்து விவரித்து அன்போடு பாவத்தை விட்டு விலக ஆலோசனை கூறுகிறது. அதே நேரத்தில், தேவ கோபாக்கினையையும், வரப்போகும் நியாயத்தீர்ப்பையும் குறித்து உணர்த்தி மனம் திரும்பும்படி கட்டளையிடுகிறது!

விசேஷமாக வெளிப்படுத்தலாகமத்தை வாசித்துப் பாருங்கள். இந்த புத்தகத்திலுள்ள மொத்த வசனங்கள் 404. இதில் 191 வசனங்கள் நியாயத் தீர்ப்பை குறித்தும்

நரகத்தைக் குறித்தும் மீண்டும் மீண்டும் எச்சரித்துக் கொண்டே இருக்கிறது. விஷயம் இப்படியிருக்க, ஊழியர்கள் நரகத்தைப் பற்றி எச்சரிக்காமல் பூசி மெழுகி பேசி விட்டுச் சென்றால், ஜனங்களின் ரத்தப்பழியை நிச்சயமாகவே கர்த்தர் அவர்களிடம் கேட்பார் என்பதை மறந்து போக வேண்டாம்.

2. அன்புள்ள தேவன் யாரையாவது நரகத்தில் போடுவாரா?

அநேகர் விதண்டாவாதம் பேசுகிறார்கள். கர்த்தர் மிகவும் அன்புள்ளவர், காருண்யமிக்கவர்; மனதுருகுகிறவர், அவர் நரகத்தை உண்டாக்கியிருப்பாரா? அப்படியே உருவாக்கியிருந்தாலும் தமது சொந்த சிருஷ்டியை அங்கே தள்ளுவாரா? அப்படியே தள்ளினாலும் அவர்களை நித்தியமாய்க் கைவிடுவாரா? என்றெல்லாம் வாக்குவாதம் செய்கிறார்கள்.

இவர்கள் யார் தெரியுமா? இவர்கள் வேதத்தை சரியாக வாசியாதவர்கள்; கர்த்தரைக் குறித்து முழுவதுமாக தெரிந்து கொள்ளாதவர்கள்; இதுவரை தனிப்பட்ட மக்கள் மேலும், தேசங்களின் மேலும் வந்த தேவ கோபாக்கினையையும், நியாயத் தீர்ப்புகளையும் குறித்து உணராதவர்கள்!

நம் தேவன் அன்புள்ளவர் தான். அதே நேரத்தில் அவர் நீதி செய்கிறவருமாயிருக்கிறார். அவர் எரிச்சலுள்ள தேவன் என்றும், பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார் என்றும் வேதம் தெளிவாய் கூறுகிறது!

தேவன் அன்புள்ளவர்தான். ஆனால் தம்மை அண்டிக் கொண்டிருக்கிற தம் பிள்ளைகளைக் காக்கும்படி அவர் கொடியவர்களை அழிக்க வேண்டியதிருக்கிறது. மற்றவர்கள் பாவத்திற்கு பயப்படும்படிக்கு எச்சரிக்க வேண்டியதிருக்கிறது! பாருங்கள், சோதோம் கொமோராவின் பாவம் மிகக் கொடியதாயிருந்தபடியினாலும், அதின் அக்கிரமம் வான பரியந்தம் எட்டினபடியாலும் கர்த்தர் வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி அந்தப்

பட்டணம் முழுவதையும் அழித்துப் போட்டாரல்லவா? (ஆதி 19:24).

மோசேக்கு எதிர்த்து நின்ற கோராகு, தாத்தான், ஆபிராம் என்பவர்களையும் அவர்களோடு சேர்ந்தவர் களையும் பாதாளம் உயிரோடு விழுங்கவில்லையா? (எண் 16:32) அந்நிய அக்கினியை ஆசரிப்புக் கூடாரத்திற்குள் கொண்டுபோய் தூபங்காட்டின இருநூற்றைம்பது பேரை யும் கர்த்தருடைய அக்கினி பட்சித்துப் போடவில்லையா! (எண் 16:35).

தேவன் சொன்னால் அதைச் செய்கிறவர். நரகத்தைப் பற்றி அவர் தெளிவாய்க் கூறி எச்சரித்திருக்க நீ நரகம் இல்லை என்று பிரசங்கித்தால், அவர் பொய்யரா? அவர் வார்த்தை வீணாகுமோ? நரகம் மட்டும் பொய் என்றால் இரட்சிப்பு, நித்திய ஜீவன், பரலோகம் மட்டும் எப்படி உண்மையாகும்?

பரலோகம் உண்டென்றால் உடனே சந்தோஷம். நரகம் ஒன்று இருக்கிறதென்றால் அதற்கு விலகும்படி பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டியதுதானே? அநேகர் தங்கள் பாவ ஜீவியத் தின் தண்டனையை சந்திக்க பயந்துபோய், நரகம் இல்லாம லிருந்தால் நன்றாயிருக்குமே என்று எண்ணி, நரகத்திற்கு விரோதமாய் பிரசங்கிக்கிறார்கள். இது ஏற்கனவேயுள்ள பாவத்தின் மீது புது அக்கிரமத்தைக் கூட்டிக் கொள்ளுத லாகும். பரலோகமும் உண்டு, நரகமும் உண்டு; வெளிச்ச மும உண்டு, இருளும் உண்டு; நித்திய சந்தோஷமும் உண்டு, நித்திய ஆக்கினையும் உண்டு; பரலோகத்தில் சாமாதான முண்டு, நரகத்தில் நித்திய வேதனை உண்டு!

அநேகர், பேர் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்து ஆசீர்வாத மான தாலாட்டுச் செய்திகளையே விரும்பி எதிர்பார்த்து, மற்ற ஊழியர்களை எடை போட்டுக் கொண்டிருக்கும் வறட்டு போலி பக்தி வாழ்க்கைக்கு வந்துவிட்டார்கள். பரி தாபம்! மனம் திரும்பாத பணக்காரர்கள், திருச்சபை அரசி யலில் புகுந்து தங்கள் விருப்பப்படி போதகர்களை திருப்பி

கூண்டோடு நரகத்தை நோக்கித் தீவிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அன்புள்ள ஆண்டவர் அவர்களை நரகத்தில் தூக்கி எறிய ஆசைப்படுவதில்லை. ஆனால் அவர்களே தங்கள் எதிர் காலத்தை நிர்ணயித்துக் கொள்கிறார்கள். இயேசு தரும் நித்திய ஜீவனை வேண்டாமென்று ஒதுக்கி, கிறிஸ்துவைப் புறக்கணிப்பதால் அவர்களே அவரை விட்டுப் புறப்பட்டுப் போய் பாதாளத்தில் விழுகிறார்கள்!

நீ வியாதிப்பட்டு வேதனைப்படும்போது டாக்டர் வந்து அன்போடு உன்னைப் பரிசோதித்து உன் நோய் நீங்க ஆலோசனைகளையும், மருந்துகளையும் தருகிறார் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் நீ அவைகளை வேண்டாமென்று வீசி எறிந்துவிட்டால் நீதானே அதன் பலனை அனுபவிக்க வேண்டும். டாக்டரை எப்படி குறை கூற முடியும்?

அப்படித்தான் கர்த்தர் உன் பாவ நோய்க்குப் பரிகாரமாக கல்வாரி இரத்தத்தைத் தருகிறார். நீ அதை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்து விட்டு தொடர்ந்து பாவத்தில் ஜீவித்தால் உனக்கு வேறு பரிகாரம் ஒன்றுமில்லையே!

3. நரகம் பூமியில் தான் இருக்கிறதா?

ஒரு நாத்திகன் ஒரு போதகரிடம் வந்து வாதிட்டான். ஐயா, நரகம் என்பது ஏதோ ஆழத்தில் வாழ்க்கையின் முடிவில் இருக்கிறது என்று எண்ண வேண்டாம். மோட்சமும் நரகமும் இந்த உலக வாழ்க்கையில் தான்! இந்த உலகத்தில் நாம் சந்திப்பதை விட வேறு நரகம் இல்லை என்றான்.

போதகர் அதற்கு பதில் சொல்லும் போது, "இந்த உலகத்தில் நரகம் இல்லை என்பதற்கு மூன்று காரணங்கள் உண்டு. முதலாவதாக, நான் ஒரு கிறிஸ்தவன். நரகத்தில் கிறிஸ்தவர்கள் இருக்க முடியாது. ஆகவே பூமியில் நரகம் இல்லை. இரண்டாவதாக, இங்கே பூமியில் உன் தாகத்தை நீ

தீர்த்துக் கொள்ள முடியும். ஆனுல் நரகத்திலோ தாகம் தீருவதில்லே. எனவே பூமியில் நரகம் இருக்க முடியாது. மூன்ருவதாக, இங்கே பூமியில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படு கிறது. ஆனுல் நரகத்தில் பிரசங்கிக்கப்பட முடியாதே என்ருர். நாத்திகனுல் பதில் சொல்ல முடியவில்லே.

4. தகப்பனின் வழியில்:-

ஓர் ஊழியர் நரகத்தைப் பற்றி பிரசங்கித்த போது ஒரு குடிகாரன் சொன்ஞன், ''என் தகப்பன் குடித்து விட்டு நரகத்திற்குப் போனுர். நான் மட்டும் மோட்சத்திற்குப் போனுல் என் தகப்பனேச் சந்திப்பது எப்படி? ஆகவே என் தகப்பனுக்குத் துணேயாயிருக்கும்படி நானும் நரகத்திற்கே போய் விடுகிறேன்" என்ருன்.

போதகர் அதற்கு, ''சரி, மிகவும் நல்லது, அதற்கு முன் நரகத்திலிருக்க சற்று பயிற்சி பெற்றுக்கொள்" என்று கூறி அவன் விரலே கொஞ்ச நேரம் அடுப்பில் வைக்கும்படிக் கேட்டுக் கொண்டார். ''நீ நரகத்தில் இரவும் பகலும் கொடிய அக்கினி ஜுவாலேயில் கிடக்க வேண்டியதிருக்குமே, கொஞ்சம் இந்த அக்கினித் தழலேயும் உன் மேல் போட்டுக் கொள்'' என்றபோது தான் அவன் சிந்திக்க ஆரம்பித்தான்.

சில நாட்களுக்குப் பின் அவனே இரும்பை உருக்கி ஊற்றுகிற ஒரு பெரிய ஊதுலேக்கு அழைத்துச் சென்ருர். அங்கே சூளேயிலுள்ள பயங்கரமான அக்கினியால் இரும்பு செந்நிற திரவமாய் கொதித்துக் கொண்டு ஓடிக்கொண்டி ருந்தது. அந்த இடத்தின் அருகிலேயே அவர்களால் செல்ல முடியவில்லே. மிக தூரத்திலிருக்கும் போதே அவர்கள் முகமெல்லாம் கருகுவதைப் போலிருந்தது. அப்பொழுது அந்த போதகர் அவனுக்கு வேதத்தில் நரகத்தைப் பற்றி வருமிடத்தையெல்லாம் சுட்டிக் காண்பித்தார். உருகுகிற இரும்பின் அருகிலேயே உன்ஞல் செல்ல முடியவில்லேயே, அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் எப்படி நித்தியத்தைக் கழிப்பாய் என்ருர். அன்றே அவன் கண்ணீரோடு மனம் திரும்பினுன்.

உலக மகா யுத்தத்தின் போது அமெரிக்கா ஜப்பானில் அணுகுண்டுகளைக் கொண்டு போய் வீசியது. அந்த விமான ஓட்டிகளிடம், நீங்கள் குண்டுகளைப் போட்டப்பின் திரும்பிப் பாராமல் வந்து விடுங்கள் என்று உத்தரவிட்டிருந்தார்கள். ஆனால் அணுகுண்டுவின் அகோர அக்கினி நாக்குகள் அந்த நகரங்களை அழித்த காட்சிகளை அவர்கள் கண்டபோது அவர்கள் மனம் வாதித்தது. சில நாட்களில் பைத்தியக் காரர்களானார்கள். பைத்தியமாகவே மரித்தார்கள்.

அப்படியானால் நரக காட்சியையேத் தொடர்ந்து பல நாட்கள் பார்த்துக் கொண்டிருப்பதும் எவ்வளவு பைத்தியக் காரத்தனமான வாழ்க்கையாயிருக்கும். நித்திய நித்தியமாய் புலம்பிக் கொண்டேயல்லவா இருக்க வேண்டும்!

நான் அந்தமான் தீவுகளுக்குப் போனபோது நான்கு நாட்கள் கடலில் பிரயாணம் செய்ய வேண்டியதிருந்தது. இரண்டாம் நாள், மூன்றாம் நாளெல்லாம் எல்லா திசைகளி லும் கடல் தான் தெரிந்தது. மகா ஆழமான பயமுறுத்தும் நீலநிறமான கடல். வடக்கேயும், தெற்கேயும், மேற்கேயும், கிழக்கேயும் கடல் தான். ஒருவன் அந்தக் கடலுக்குள் விழுந்து விட்டால் எந்தத் திசையில் நீந்துவான்?

அதே கடலை அக்கினியாய் நினைத்துப் பாருங்கள்...... அக்கினியின் பயங்கரமான அலைகளின் மேலும் கீழும் அலைக் கழிக்கும் நிலைமையை சிந்தியுங்கள். எந்தப் பக்கம் செல்லு வது என்று அறியாமல் பரிதபிக்கும் அகோர நிலையில் அக்கினியும் வெப்பமும், தாங்க முடியாத தாகமும், நம்பிக் கையற்ற சூழ்நிலையும் எத்தனை கொடூரமாயிருக்கும்!

என்னோடு கூட அரசாங்கத்தில் பணியாற்றிய ஒரு பெண், தன் கணவனுக்குத் துரோகம் செய்து வேறு ஒரு வாலிபனோடு திருட்டுத்தனமானத் தொடர்பு வைத்தாள், நான் எச்சரித்துப் பார்த்தேன். அவளோ செவி சாய்க்க வில்லை. ஒரு நாள் அந்த விவகாரம் அவள் கணவனுக்குத்

தெரிய வந்தது. கணவனையும், பின் விளைவுகளையும் சந்திக்க பயப்பட்ட அவள், தன் வீட்டிற்குள் போய் கதவைப் பூட்டிக் கொண்டு தன் தலையின் மேல் கெரசினை ஊற்றிக் கொண்டு தீ வைத்துக் கொண்டாள். தீ யெரிந்த போது தான் அதன் வேதனை அவளுக்குத் தெரிந்தது. அந்த அக்கினி யின் அகோரம் தாங்க முடியாதபடி அந்த அறைக்குள் அலறிக் கொண்டு சுற்றிச் சுற்றி ஓடினாள். அந்த அறையின் சுவரெல்லாம் அவளது கையின் அக்கினி தடங்கள் பதிந் திருந்தன. தரையெல்லாம் கரியும் புகையுமாய் கால் தடங் கள் தெரிந்தன. எத்தனை வேதனையோடு அந்த அறைக்குள் சுற்றிச் சுற்றி ஓடியிருந்திருப்பாள்! அவள் உருவம் எரிந்து அகோரமாய் கிடந்தது. எத்தனை பயங்கரம், பேய்த் தோற்றமளித்த அவள் முகம் பார்க்க திகிலைக் கொண்டு வருவதாய் இருந்தபடியால் அவளை துணிகளில் சுற்றினார்கள். பின்பு அவளைச் சிதையூட்டிய சுடுகாட்டிற்குக் கொண்டு வந்தார்கள். அவளுடைய குடும்பத்தாரின் பழக்கத்தின்படி அவள் சரீரத்தை மீண்டும் எரித்தார்கள்.

தீ ஜுவாலை எழும்பிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டே நின்ற என் மனக்கண்களில், அவள் எப்படி தன் அறைக்குள், தன்மேல் தீ எரியும் போது, அலறித் துடித்துக் கொண்டு கதறி சுற்றி ஓடியிருப்பாள் என்ற காட்சிதான் வந்தது! பாவத்தின் சம்பளம் எத்தனை அகோரமானது!

அப்படித்தானே, நரகத்தில் யுகாயுக காலமாய் அலறி அலறி ஓடிக் கொண்டேயிருக்க வேண்டும்! அங்கு சில நிமிடங் களல்ல... நித்திய நித்திய காலங்கள்!

பாவத்தை அசட்டைச் செய்யாதே! இன்னும் உன்னை மன்னித்து பாவங்களறக் கழுவக் காத்திருக்கும் இயேசு கிறிஸ்துவின் கல்வாரி அன்பைப் புறக்கணிக்காதே!

இப்பொழுதே இயேசுவிடம் ஓடிவந்துவிடு...! இந்த கிருபையின் காலத்தைப் பயன்படுத்திக்கொள்!

அத்தியாயம் 1

கர்த்தர் எழுப்பினர்!

'விசுவாசத்தைப்' பற்றி மிக அழகாக எழுதிவரும் Dr. கென்னத் ஹேகின் என்பவருடைய அருமையான புத்தகங்களை சில மாதங்களுக்கு முன் படித்தேன். உலக முழுவதிலும் அவரது புத்தகங்கள். ஆவிக்குரிய புத்தகங்கள் ஒரு புரட்சியையும், மறுமலர்ச்சியையும் உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. என் உள்ளத்தை அசைத்த சாட்சிகளில் அவரது சாட்சியும் ஒன்று. இன்றைக்கும் அவர் ஜீவனோடிருக்கிறார். இதோ அவரே நேரிடையாக அவரது சாட்சியை உங்களோடு பகிர்ந்து கொள்ளட்டும்.

''எனக்கு 15 ஆவது வயது நடந்து கொண்டிருந்த போது மிகவும் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையிலானேன். ஐந்து டாக்டர்கள் எனக்கு சிகிச்சையளித்தும் என் உடல் நிலை தேறவில்லை. அதற்கு மேலும் பெரிய டாக்டர்களிடம் செல்ல, குடும்ப நிதிநிலைமை ஒத்துக் கொள்ளவில்லை.

முதலில் என் இருதயம் சரியாக வேலை செய்யாமலிருந்தது. பின்பு சில வாரங்களில் என் கை கால்கள் மரத்துப் போய், உணர்ச்சியற்று விழுந்துவிட்டது. குடிப்பதற்கு தண்ணீர் மேஜையின் மேலிருக்கும். அதைக் காண்பேன். ஆனால் அதை நோக்கி என் கரங்களை நீட்ட இயலாது. முக்கால் மணி நேரம் விடாமுயற்சியோடு கையை அசைத்தால அந்த டம்ளரைத் தொடமுடியும். ஆனால் தூக்க இயலாது. அதன்பின்பு சில நாட்களில் எனக்கு காதும் கேட்காமல் போய்விட்டது. மிக உரத்த சத்தமாய் பேசினல் மெதுவாக ஏதோ ஒரு கிணற்றுக்குள்ளிருந்து யாரோ பேசுவதைப் போல இருக்கும். நாளாக ஆக, இந்த பூமியில் வாழ எந்த சக்தியுமில்லாமல் போய்விட்டது.

1933 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் தேதி என் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு நாள் ஆகும். அன்று மிகவும்

தள்ளாடி பெலன் குன்றிப் போனேன். மாலை நேரத்தில் மரணம் என்னைப் பிடித்துக் கொண்டது. என் சரீரத்திற் குள்ளிருந்து உள்ளான மனுஷன் வெளியாகப் போகும் அந்த நேரத்தில், என்னைச் சூழ இருந்த என் பாட்டி, என் அம்மா, என் தம்பி ஆகிய மூவருக்கும் "குட்-பை" மட்டுமே என்னால் சொல்ல முடிந்தது.

அடுத்த விநாடி, என் ஜீவன் சரீரத்திலிருந்து விடுபட்டு, பூமியின் ஆழத்திற்குள் செல்ல ஆரம்பித்தது. பூமியின் விளக்குகள், பிரகாசங்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது. பாவத்தில் மரித்தவர்கள் அழுகையும் பற்கடிப் பும் உண்டாயிருக்கும் புறம்பான இருளிலே தள்ளப்படு வார்கள் என்று வேதம் சொல்கிறது.

நான் எவ்வளவுக்கெவ்வளவு பூமியின் தாழ்விடங்களில் இறங்கிச் சென்றேனோ, அவ்வளவுக்கவ்வளவு காரிருள் என்னைச் சூழ்ந்து கொண்டது. மட்டுமல்ல, வெப்பமான அக்கினிக் காற்றும் கீழிருந்து வந்து கொண்டேயிருந்தது. என் கண்களால் ஒன்றையும் காண முடியவில்லை.

இன்னும் மிக ஆழத்திற்குள் என் ஜீவன் இறங்கியபோது தீச்சுவாலையின் கொழுந்துகள் அந்தப் பாதாளத்தின் அடி யில் தெரிந்தது. அதற்குள் ஒரு பெரிய அக்கினி அலையின் நாக்கு உயர எழும்பி என்னை அதன் பக்கமாக இழுத்தது எப்படி ஒரு காந்தம் இரும்பை இழுக்குமோ அப்படி அந்த தீச்சுவாலை என்னை இழுத்தது. எனக்கு அங்கு போக கொஞ்ச சமும் விருப்பமில்லை. அந்த ஜுவாலையின் அக்கினிக் காற்று என் முகத்தைக் கருகப்பண்ணியது. இன்று எத்தனையோ வருடங்கள் ஓடிவிட்டாலும் கூட அந்த நினைவுகள் என் உள் ளத்தை விட்டு அகலவே இல்லை!

நான் நரகக் கடலின் வாசலுக்கு வந்தேன். அதை எப்படி வருணிப்பது என்று தெரியவில்லை. மரத்தையே பார்த்தறியாத ஒரு குருடனுக்கு மரத்தைப் பற்றிக் கூறுவது கடினமல்லவா? அப்படியே நரகக கடலின் பயங்கரமான தோற்றத்தை வார்த்தைகளால் வர்ணிக்கவே முடியாது!

அந்த வாசலின் அருகில் வந்ததும், மேற்கொண்டு செல்ல பிரியப்படாமல் தயங்கினேன். இன்னும் மூன்று அடி வைத்துச் செல்வேனுகில் நிச்சயமாய் அந்த பாதாள அக்கினிக் கடலுக்குள் விழுந்து விடுவேன். அதன் பின்பு வெளியேறவே இயலாது.

அந்த பாதாளத்தின் அடிவாரத்தில் ஒரு உருவம் என்னைச் சந்தித்தது. என் கண்களோ அக்கினி ஜுவாலையையே குத்திட்டு நோக்கியபடியால் என் பார்வையை அந்த உருவத்தின் பக்கமாகத் திருப்ப முடியவில்லை! என்ன செய்ய வென்று அறியாமல் தயங்கியபோது மிருகத்தைப் போலிருந்த அந்தப் பயங்கரமான உருவம் என்மேல் தன் கையை வைத்து இழுத்துச் சென்றது.

அந்த விநாடியில் மிக உயரத்திலிருந்து, பூமிக்கு மேலிருந்து, ஆகாயமண்டலத்திலிருந்து ஒரு பலமிக்க தொனி முழங்கியதைக் கேட்டேன். அது பிதாவின் குரலா, கிறிஸ்துவின் குரலா, அல்லது தேவதூதனின் குரலா என்று தெரியவில்லை. அந்த வார்த்தைகளின் அர்த்தமும் எனக்குப் புரியவில்லை.

ஆனால் அந்த வார்த்தைகள் முழங்கியபோது முழு பாதாளமும் பெருங்காற்றினால் இலைகள் அசைவதைப் போல அதிர்ந்தது. மறுவினாடி என் கையைப் பிடித்திருந்த அந்த உருவம் தன் பிடியைத் தளர்த்தினது. அப்பொழுது என் ஜீவனை யாரோ உறிஞ்சி மேலே இழுப்பதைப் போன்று உணர்ந்தேன்.

என் ஜீவன் அந்த பாதாளத்தின் மேலே வந்தது. மீண்டும் பூமியின் வெளிச்சங்களைப் பார்த்தேன்; நான் மரித்த அதே சரீரத்திற்குள் வந்துவிட்டேன்.

என் அருகில் இருந்த என் பாட்டியை அழைத்தேன். அவர்கள் என்மேல் அன்போடு தன் கையை வைத்து, "நீ மரித்து விட்டாய் என்றல்லவா நினைத்தேன்; என்ன நடந்தது?" என்றார்கள்.

எனக்கு திரும்பவும் உயிர் பிரிவதைப் போலிருந்தது. எவ்வளவு நேரம் ஜீவன் சரீரத்தில் ஊசலாடுமோ தெரியவில்லை. "பாட்டி எனக்கு நினைவு மங்குகிறது, நான் மரித்துக் கொண்டிருக்கிறேன்; அம்மா எங்கே?" என்று கேட்டேன்.

"அம்மா பின் ஹாலில் இருக்கிறார்கள்" என்று பாட்டி பதில் சொன்னார்கள். அப்பொழுதுதான் அம்மா அங்கே மிகவும் சத்தமாய் ஊக்கமாய் ஜெபித்துக் கொண்டிருக்கும் ஜெப சத்தம் என் காதுகளில் கேட்டது. அம்மாவை தொந்தரவு செய்ய விரும்பவில்லை.

"பாட்டி, என் தம்பி எங்கே?" என்று கேட்டேன். அவன் டாக்டரைக் கூப்பிட வேகமாக போயிருப்பதாக பாட்டி பதில் சொன்னார்கள்.

"பாட்டி, தயவு செய்து என் அருகிலேயே இருங்கள். எங்கும் போய்விடாதிருங்கள்; எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது, போய்விடாதிருங்கள்" என்று கெஞ்சினேன். பாட்டி என்னைத் தடவிக் கொடுத்து அணைத்துக் கொண்டது மிகவும் ஆறுதலாக இருந்தது.

"பாட்டி, என் உயிர் என்னைவிட்டு நழுவுகிறதைப்போல் இருக்கிறது. அம்மாவுக்கு என் அன்பின் நன்றியைத் தெரிவியுங்கள். என்னை அவர்கள் எவ்வளவு நேசித்து எனக்குப் பணிவிடை செய்தார்கள்! அவர்களுக்கு என்னால் எந்த உதவியையும் செய்ய முடியவில்லை. நான் அவர்களைப் புண்படுத்தியது உண்டானால், அவர்களை வேதனைக்குள்ளாக்கியது உண்டானால், என்னை மன்னித்துவிடச் சொல்லுங்கள்..."

மறுபடியும் என் இருதயத் துடிப்பு நின்றது. முன்பு போலவே என் ஜீவன் பாதாளத்திற்குள் இறங்கியது. பாதாளத்தின் அக்கினி ஜுவாலை என்னை காந்த சக்திபோல் இழுத்தது. மறுபடியும் அதே கரிய உருவம் என்னை சந்தித்த போது. வானத்திலிருந்து அந்த முழக்கம் முழங்கி என்னை விடுவித்தது.

மீண்டும் என் ஆவி பூமிக்கு வந்து, சரீரத்தில் புகுந்தது. பாட்டி, நான் மறுபடியும் உயிரோடு வந்துவிட்டேன். இனி

ஜீவன் போனால் என்னால் வரமுடியாது. தாத்தா எங்கே போய்விட்டார்கள்? அவர்களிடம் நான் போகிறேன் என்று சொல்லவில்லையே? என்றேன்.

அதற்கு பாட்டி, ''அவர்கள் வாடகை பணம் வசூல் செய்ய போய்விட்டார்கள்; கொஞ்ச நேரத்தில் வந்துவிடு வார்கள்'' என்றார்கள்.

என் நினைவு என்னைவிட்டு மீண்டும் அகலுமுன், என் தம்பிக்கு, தங்கைக்கு, தாத்தாவுக்குச் சொல்லவேண்டிய வார்த்தைகளையெல்லாம் என் பாட்டியிடம் கூறினேன். எனக்கு மிகவும் பயமாயிருந்தது. மீண்டும் அந்த பாதாளத் திற்குச் சென்றால் தப்பிவரமுடியாதே என்று எண்ணினேன்.

நரகத்தின் படுவேதனைகளை வார்த்தையால் வர்ணிக்கவே இயலாது! எத்தனை பயங்கரம்! ஆனால் பூமியில் வாழும் ஜனங்கள்,அந்த நிச்சயமான நித்தியத்தைக் குறித்த நினைவே இல்லாமல் எவ்வளவு அசட்டையாக வாழ்கிறார்கள்! நரகத்தை நேருக்கு நேர் சந்திக்கிற வரையிலும் அவர்கள் உணர்வில்லாமல் இருக்கும்படி சாத்தான் ஜனங்களின் மனக்கண்களைக் குருடாக்கிப் போட்டது எத்தனை பரிதாபம்! பூமியில் எங்கும் கண்டிராத காரிருள்; சந்தித்திராத அக்கினி; வார்த்தைகளால் விவரிக்க முடியாத வேதனை; இதை ஒவ்வொரு பாவியும் சந்தித்தே தீரவேண்டும்.

மூன்றாவதுமுறை என் ஆத்துமா பாதாளத்தில் இறங்கிய போது தேவனை நோக்கி கதறி, ''ஆண்டவரே, நான் ஆலயத் திற்குச் செல்கிறவன்; ஞானஸ்நானமும் கூட பெற்றிருக் கிறேனே!" என்று கதறினேன். கர்த்தரிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. என் குரலின் எதிரொலிதான் பரியாச மாய் என் காதுகளில் தொனித்தது.

நான் மனம் திரும்பவோ, மறுபடியும் பிறக்கவோ இல்லை என்பதை உணர்ந்தேன். மறுபடியும் பிறக்கவேண்டும் என்று இயேசு கூறினாரே (யோவான் 3:7).

பாதாளத்திற்குச் செல்லும் வழியில் இரண்டாம் முறையும் நான் ஆண்டவரை நோக்கிக் கதறினேன்,

''ஆண்டவரே, நான் ஆலயத்திற்குச் செல்கிறவன், ஞானஸ் நானம்கூட பெற்றிருக்கிறேன்" என்றேன். அதற்கும் பதில் இல்லை.

மூன்றுவது முறை நான் மிகவும் கலங்கி, பயந்து அலறி, ''ஆண்டவரே, ஆண்டவரே, நான் கிறிஸ்தவன்; ஞானஸ் நானம்கூட எடுத்திருக்கிறேன்'' என்று கதறினேன். நான் அன்று எப்படிக் கதறினேன் என்பதை இப்பொழுது நான் உங்களுக்குச் செய்து காட்டினுல் நீங்கள் பயந்து விடுவீர்கள். என் அலறலின் துயர தொனி பாதாளமெங்கும் எங்கும் எதிரொலித்தது. ஆனுலும் எந்த பதிலும் இல்லை.

அந்த பாதாளத்தின் அடித்தளத்தில் வந்ததும் முன்பு கண்ட அதே உருவம் என்னைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டது. அதனுடன் சண்டையிட்டு தப்ப நினைத்தேன். ஆனுல் முடியவில்லை. முன்பு இருந்ததைவிட மிக அதிகமாக பயமும் திகிலும் என்னைப் பிடித்தது.

நல்ல வேளை, மீண்டும் வானத்திலிருந்து அந்த குரல் ஒலித்தது. என்னைப் பிடித்திருந்த அந்த கொடிய மிருகம் போன்ற பிசாசு என்னை விட்டு விட்டது. என் ஆத்துமா மேலெழும்பி வரும்போது நான், ''ஆண்டவரே, இயேசுவின் நாமத்தில் எனக்கு மனதிரங்கும்; என் பாவங்களற என்னைச் சுத்திகரியும்'' என்று ஜெபித்தேன்.

பாதி ஜெபித்துக் கொண்டிருக்கும்போதே என் ஆத்துமா சரீரத்திற்குள் புகுந்து கண்களைத் திறந்தேன். எனினும் தொடர்ந்து மிக, மிக சத்தமாக என் முழு பெலத் தோடும் ஜெபித்துக் கொண்டே இருந்தேன். என் தாயார் ஊக்கமாக கதறி ஜெபித்த குரல் என் காதுகளில் தொனித் தது. என் தாயின் ஜெப சத்தம் அனைத்து கார்கள், சைக்கிள் களையும் நின்று போகப்பண்ணி, எங்கள் வீட்டையே நோக்கும்படிச் செய்தது.

நான் சுவர் கடிகாரத்தை நோக்கிப்பார்த்தேன். மணி இரவு 7-40, அப்பொழுது என் முழு இருதயத்தையும், என்

முழு வாழ்க்கையையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தேன். மறுபடியும் பிறந்த அனுபவம் முதல் முறையாக அப்பொழுது தான் அடைந்தேன். கர்த்தருடைய கிருபையாலும் என் தாயாரின் ஊக்கமான ஜெபத்தாலும், தேவன் என்னை இரட்சிக்க சித்தம் கொண்டார்.

என் பாவங்கள் எனக்கு மன்னிக்கப்பட்ட நிச்சயம் எனக்குள் வந்தது. என் சரீரத்திலிருந்து ஒரு பெரிய பாரம், ஒரு டன் எடையுள்ள பாரம் நீங்கி ஓடியதைப் போல் உணர்ந்தேன். என் ஆத்துமாவில் சந்தோஷமும், ஆவியில் களிகூருதலும் உண்டானது. அதற்குப்பின் எனக்கு மரண பயம் ஏற்பட்டதில்லை.

நான் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தது கிறிஸ்தவ மார்க்கத்தில் புதியதல்ல. இயேசு கிறிஸ்து மூன்று பேரை உயிர்ப்பித்ததை சுவிசேஷங்களில் வாசிக்கிறோம். 1. பெத் தானியாவின் லாசரு 2. யவீருவின் மகள் 3. நாயீனூர் விதவையின் மகன். அப்போஸ்தலனாகிய பேதுரு தொற்காள் என்னும் பெண்ணை உயிரோடு எழுப்பினார். அப்போஸ்தலனாகிய பவுல் ஐத்திகு என்னும் வாலிபனை எழுப்பினார். இன்றும் கர்த்தர் தம் ஊழியர்கள்மூலம் அதே அற்புதங்களைச் செய்து வருகிறார். அல்லேலூயா!

அத்தியாயம் 5

பிரசங்கியுங்கள்!

நரகத்தைப் பற்றி கிறிஸ்து பிரசங்கித்தார். அப்போஸ்தலர்கள் பிரசங்கித்தார்கள். வேதத்திலுள்ள ஒவ்வொரு புத்தகமும் பிரசங்கிக்கின்றன.

காலம் உருண்டோடுகிறது. பூமியில் பிறந்த ஒவ்வொருவரும் மரணத்தைச் சந்திப்பது உறுதி. ''ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது'' என்று வேதம் தெளிவாய்க் கூறுகிறது. காரியம் இப்படியிருக்க, நித்தியத்தைக் குறித்து வேதத்தின் வெளிச்சத்தில் அறிந்த நாம் அதைக் குறித்து ஜனங்களை எச்சரிக்காமல் இருக்கலாமா?

அநேகர் தங்களுக்கென்று ஒரு சில உபதேசங்களை வைத்துக்கொண்டு, அதையே இரவும் பகலும் பேசி, விசுவாசிகளின் மூளையைத் திருப்பி, அவர்களை சபை வைராக்கியமுள்ளவர்களாக்கி, மற்றவர்கள் மீது சேற்றை அள்ளி வீசிக்கொண்டேயிருக்கிறார்கள். இன்னும் சிலர், நான்கு சுவர்களுக்குள் வெள்ளுடை தரித்து வேறுபாட்டின் ஜீவிய உபதேசம் என்ற பெயரில் எல்லோரையும் பகைத்து, ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டே இருக்கிறார்கள்!

தினமும் அவர்களுக்கு பிரசங்கமாகிய பிரியாணி வேண்டும்! நான்கு மணி நேர் பிரசங்கங்கள்! வேத பாடங்கள்! தங்கள் அங்கத்தினர் வீடுகளிலேயே தினந்தோறும் ஜெபக் கூட்டங்கள். ஆனால் திரளான ஏழைக் கிராமங்கள் மேல் பரிதாபமும், அக்கரையும் கொள்வாரில்லை.

அதே நேரத்தில் முற்காலப் பிரசங்கிகள் நரகத்தைக் குறித்து தைரியமாய் பிரசங்கித்தார்கள். பெயரையோ, புகழையோ விரும்பாமல் கண்டித்து உணர்த்தினார்கள் இதோ சில உதாரணங்கள்:

1. ஜாண் வெஸ்லி:-

ஜாண் வெஸ்லியைக் குறித்து அறியாதவர்கள் இல்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் தலை சிறந்த பிரசங்கிகளில் இவரும் ஒருவர். ஆயிரக்கணக்கான மக்களை கர்த்தரண்டை திருப்பிய இவரது முக்கிய பிரசங்கங்களில் ஒன்று நரகம்! அடிக்கடி அவர் நரகத்தைப் பற்றியே பிரசங்கித்தார்!

அவர் ஆறு வயது நிரம்பிய சிறுவனாயிருந்தபோது அவர் இருந்த வீடு தீப்பற்றிக் கொண்டது. அவர் உள்ளே சிக்கிக் கொண்டார். அவர் தப்பியது பெரிய அதிசயமே. அந்த வீடு முழுவதும் எரிந்து நாசமாவதை அவர் தன் சொந்தக் கண்களாலே பார்த்துக் கொண்டேயிருந்தார். அது இவர் உள்ளத்தில் ஆழமான வேதனையான நினைவுகளைப் பதித்தது. தன்னை "அக்கினியில் அகப்பட்டுத் தப்பின கொள்ளி" என்று அடிக்கடி கூறுவார்.

ஒரு பிரசங்கத்தில் அவர் சொன்னார், "நீ எந்த பாதையில் செல்லுகிறாய் என்பதை சீர்தூக்கிப்பார். விசாலமான பாதையில் அநேகருடன் உல்லாசமாய் செல்லுவாயானால் அந்த பாதை நித்திய அழிவை நோக்கிச் செல்கிறது என்பதைத் திட்டமாய் அறிந்து கொள். ஆம், நீ நரகத்தை நோக்கித்தான் நடைபோடுகிறாய்.

எந்த நிமிடம் உன் ஆத்துமா சரீரத்திலிருந்து பிரிகிறதோ, அந்த நிமிடம் நீ கர்த்தருக்கு முன்பு வெளியரங்கமாய் நிற்க வேண்டியதிருக்கும். அப்பொழுதே நீ நித்தியத்தை நரகத்தில் செலவழிப்பாயா அல்லது மோட்சத்தில் செலவழிப்பாயா என்பது தெரிந்து விடும்.

நரகத்தின் வேதனையோ ஒப்பில்லாததும் ஒழிவில்லாததுமாயிருக்கும். யாரும் வந்து அந்த வேதனையை நீக்கப் போவதே இல்லை. நரக வாதையின் புகை இரவும் பகலும் மேலே எழும்பிக் கொண்டேயிருக்கும். அங்கு தூங்கி இளைப்பாற முடியாது. தலையணை வைத்து சொகுசாக படுக்கவும் முடியாது. ஐயோ, எனக்கு மயக்கம் வருகிறது, தன்னறிவற்று

போனுல் எவ்வளவு நலமாயிருக்குமே என்று ஏங்கினுலும் பிரயோஜனமில்லே!

வேதம் சொல்கிறது, ''அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும். மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும், இளைப்பாறுதலிராது''

(வெளி. 14:11).

ஜாண் வெஸ்லியின் பிரசங்க மிது! அவரைப் போல தைரியத்தோடும் எச்சரிப்பின் தொனியோடும் பேசுகிற ஊழியர் நம் தேசத்தில் எழும்பினுல் எத்தனை நலமாய் இருக்கும்!

2. ஜாண் ஆர். ரைஸ்

முதிர்ந்த வேத பண்டிதரான இவர் கூறுகிறர், ''நான் பேர் பெற்ற சர்வ கலாசாலேயில் கற்றுத் தேறி, கல்லூரி ஆசிரியனுய்ப் பணியாற்றி, 45 ஆண்டுகளுக்கதிகமாய் பத்திரிகை ஆசிரியனுய் இருந்து வருகிறேன். நான் இன்று நேற்று பிறந்தவனல்ல. என் புத்தக சாலேயில் 9000 புத்தகங்கள் இருக்கின்றன. எனக்குப் போதுமான அறிவு உண்டு. நரகம் அவியாத அக்கினியுள்ள இடம் என்று வேதம் திரும்ப திரும்ப பல முறை கூறுகிறதே. அதை நான் அப்படியே நம்புகிறேன். அது எனக்கு சந்தோஷமல்ல, என் தேவன் நீதியையே செய்வார்.

தேவனுடைய அன்பை மட்டும் நினைத்து அவருடைய பரிசுத்தத்தை மறந்துவிடுகிறது சரியல்ல. அன்பாயிருக்கிற தேவன் பட்சிக்கிற அக்கினியாயும் இருக்கிறர் (I யோ 4:16; எபி. 12:29). நெகேமியாவும் தானியேலும், மோசேயும் அவரைப் பயங்கரமான தேவன் என்றுர்கள் (நெகே. 1:5; தானி. 9:4; உபா. 10:17).

ஏசாயா அவருடைய உக்கிரம், கண்டிதம், கோபம், இவைகளேக் குறித்து திட்டமாய் எழுதியிருக்கிறர்.

(ஏசாயா 51:20; 63:5,6). ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமாயிருக்கும் (ஏசா 10:21).

3. ரிச்சர்ட் உம்பிராண்ட்:-

பதினான்கு ஆண்டுகள் கிறிஸ்துவினிமித்தம் சிறைவாசம் செய்த அவர், நாத்திகர்களிடமும், கம்யூனிச வாதிகளிடமும் பிரசங்கித்தபோது சொன்னார்,

''வாழ்க்கை என்றாலே என்னவென்று தெரியாமல் இருக்கும் உங்களுக்கு மரணம் என்றால் என்ன புரியப் போகிறது? நீங்கள் மரணத்தை இரசாயனச்சிதைவு என்கிறீர்கள். மரித்த ஒருவரிடம் போய் ஆறுதல் சொல்ல திராணியில்லாமல், அவரது சரீர அணுக்கள் சிதைவடைந்து இயற்கையோடு கலந்துவிட்டது. எங்கள் சோசியலிஸமோ முன்னேறுகிறது" என்று கூறுகிறீர்கள். உங்களுக்கு எதிர் காலத்தைக் குறித்த என்ன எதிர்பார்ப்பு உண்டு?

தோழர்களே, உங்கள் தோழரும் நாத்திகவாதியுமான டெலிராண்டு (Taleyrand) மரிக்கும்போது, ''ஐயோ, கைவிடப்பட்டவர்களுக்கு வரும் வேதனை என் இருதயத்தைப் பிடித்துப் பிழிகிறதே'' என்றார். மிராபு என்ற நாத்திகர் (Mirabeau) மரிக்கும்போது, ''ஐயோ பயம் என்னை வாட்டுகிறதே. நித்தியத்தை சந்திக்க பயமாயிருக்கிறதே. எனக்கு மயக்க மருந்து தரமாட்டீர்களா?'' என்றார். கடவுள் இல்லை என்று ஏராளம் புத்தகங்களை எழுதித் தள்ளிய வால்டேயர் ''ஐயோ, நான் மனுஷராலும் தெய்வத்தாலும் கைவிடப்படுகிற நிலைமைக்கு வந்தேனே, நரகத்திற்கல்லவா செல்கிறேன். கிறிஸ்துவே, ஆ இயேசு கிறிஸ்துவே!'' என்றார். பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த ஒன்பதாவது சார்லஸ் மன்னர் மரிக்கும்போது: ஆ! எத்தனை கொலைகள் செய்தேன், எவ்வளவு திரளான இரத்தம் சிந்தினேன், துன்மார்க்கருடைய ஆலோசனையைப் பின்பற்றி சீர்கெட்டுப் போனேனே. இப்போதோ நான் எல்லாவற்றையும் இழந்து போகிறேனே" என்றார். வேதத்தையும் கிறிஸ்துவையும் கேலிசெய்து புத்தகங்கள் வெளியிட்ட டாம்பேய்னி என்பவர்

மரணத்தருவாயில், ''ஐயோ தனிமை என்னை வாட்டுகிறது... இயேசுவே எனக்கு இரங்கும். கிறிஸ்துவே கைவிடாதிரும்... தயவாக என் அருகில் வாரும்'' என்று கதறினர்.

வாழ்க்கையில் வீரம் பேசிய நாத்திக தோழர்கள் மரணத்தில் கோழைகளாய் கதறியதேன்? மரணத்திற்கு அஞ்சியதேன்? சாவுக்கு பயந்ததேன்?'' என்ருர்.

4. லியோனர்ட் ரேவன்ஹில்:-

எழுப்புதல் தாமதிப்பதேன் என்ற புத்தகத்தின் ஆசிரியரான இவரது எழுத்துக்களும் வார்த்தைகளும் கூரிய அம்பு போல் தைக்கக் கூடியவை. அவர் பிரசங்கித்தார்:

''நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே" (ரோமர் 14:10).

கவனியுங்கள், கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக... அந்த வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பை எதிர்நோக்கி... நிற்க வேண்டும்.

பெர்ஷியாவின் சக்கரவர்த்தி வைத்திருந்தாரே மயில் இறகு சிங்காசனம்— அதற்கு முன்பாக அல்ல, சாலொமோன் தங்கத்திலும் யானை தந்தத்திலும் செய்திருந்தாரே அந்த சிங்காசனத்தின் முன்பாகவும் அல்ல... வானமும் பூமியும் விலகி ஓடக்கூடிய மகா வல்லமையின் பிரசன்னமுள்ள கர்த்தாதி கர்த்தருடைய சிங்காசனத்தின் முன்பு நிற்க வேண்டும்.

சகலரும் அவருக்கு முன்பாக நிற்க வேண்டும். ஆதாம் முதல் பூமி அழிக்கப்படும் நேரமுள்ள கடைசி மனுஷன் வரை அந்த வெள்ளை சிங்காசனத்தின் முன்பாக நின்றே ஆக வேண்டும்.

அவரிடம் லஞ்சம் கொடுத்து தப்பமுடியாது. சிபாரிசுக்கு யாரையும் கொண்டு வரவும் முடியாது. பூமியில் லட்சாதிபதியாய் வாழ்ந்தவனாயிருந்தாலும் அவருக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் முழங்கால் முடக்கியே நின்ருக வேண்டும்.

பணம் செல்லாக் காசாகி விடும். ஒவ்வொரு அந்தரங்க ரகசியமும் வெளியரங்கமாகும்.

அதன் பின்புள்ள நித்திய தண்டனை எத்தனை பயங்கர மாயிருக்கும்!

இன்னும் அதிகமான கர்த்தருடைய ஊழியர்களது பிரசங்கங்களை ஏராளமாக எழுதலாம். இடம் கொள்ளாத படியால் சுருக்கிக் கொள்கிறேன்.

“ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளி விட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிகிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்த ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்” (எபிரெயர் 12:1).

அத்தியாயம் 6

பயணமா?

ஒரு பழங்காலத்து வேடிக்கையான கதை உண்டு. அந்தக் கதை நம்மை சிந்திக்க வைக்கிறது!

ஓர் ஊரில் ராஜ அரண்மனையில் விகடகவியாகிய கோமாளி ஒருவன் இருந்தான். உண்மையில் அவன் கூரிய அறிவாளியாயிருந்தாலும் கூட அரண்மனையில் ஒரு பைத்தியக்கார முட்டாளைப் போல நாடகமாடி எல்லோரையும் சிரிக்க வைப்பான். அதே நேரத்தில் ஆழமாகவும் சிந்திக்கவும் வைப்பான்.

அந்த ராஜா ஒரு நாள் அவனிடம் ஒரு கோலைக் கொடுத்தான். அதின் மேல் முட்டாள்களின் தலைவன் என்று எழுதியிருந்தது. ராஜா சொன்னான், ''இப்போதைக்கு முட்டாள்களின் தலைவன் நீ தான்; எப்பொழுது உன்னைவிட படு அதிகமான முட்டாள் ஒருவனைக் காண்கிறாயோ, அப்பொழுது இந்தக் கோலை அவனிடம் கொடுத்துவிடு'' என்றான்.

அப்படியே அந்த கோமாளி அந்தக் கோலை தன்னிடமே வைத்திருந்தான். காலம் கடந்து சென்றது.

ஒரு நாள் அந்த ராஜா மிகவும் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையிலானான். எல்லோரும் கண்ணீரோடும் கவலையோடும் ராஜாவைத் தரிசித்துவிட்டுப் போனார்கள்.

கடைசியாக அந்த கோமாளி வந்தான். ''எப்படி ராஜா இருக்கிறீர்கள்?'' என்று விசாரித்தான். அதற்கு அந்த ராஜா, தான் மிகவும் பெலவீனமாகிவிட்டதாகவும், உலகத்தை விட்டுக் கடந்து செல்லப்போவதாகவும் தெரிவித்தார்.

''எப்பொழுது திரும்பி வருவீர்கள், ராஜா?"

''திரும்பி வர முடியாதே"

''இந்த உலகத்தை விட்டுப் போகப்போகிறேன் என்றீர்களே, எங்கே, எந்த தேசத்திற்குச் செல்லுகிறீர்கள் ராஜா?''

''அது தான் தெரியவில்லை!''

''சரி, வழிப் பிரயாணத்திற்கு ஏதாவது ஆயத்தம் செய்தீர்களா?''

''இல்லையே!"

அந்தக் கோமாளி தன் கையில் கொண்டு வந்திருந்த கோலைக் கொடுத்தான். அதில் ''முட்டாள்களின் தலைவன்" என்று எழுதப்பட்டிருந்தது. ''ராஜாவே, இந்தக் கோலை மீண்டும் உங்களிடம் கொடுப்பதில் நான் துயரப்படுகிறேன். நீண்ட பயணம் புறப்படுகிற நீங்கள் எங்கே போகிறீர்கள் என்றும், எப்பொழுது திரும்பி வருவீர்கள் என்றும் அறியாமல் எந்த ஆயத்தமும் செய்யாமல் இருக்கிறபடியால், உங்களைவிட பெரிய முட்டாள் வேறு யாரும் இருக்க முடியாது. ஆகவே கோலைப் பிடியுங்கள்'' என்றான்.

''உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு''

(ஆமோஸ் 4:12).

இரண்டு காரியங்கள் எப்பொழுதும் நம்மை எதிர்நோக்கியிருக்கின்றன. ஒன்று கிறிஸ்துவின் வருகை; இரண்டாவது நமது மரணம். நித்தியம் நமக்கு மிக அருகிலேயே இருக்கிறது! சந்திக்க ஆயத்தமா?

பரீட்சையை சந்திக்க புத்தியுள்ள மாணவர்கள் இரவும் பகலும் கஷ்டப்பட்டு படிதது ஆயத்தமாகிறார்கள். பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை வளமயமாக்க ஞானமுள்ள பெற்றோர் பணத்தைச் சேர்த்து ஆயத்தமாகிறார்கள். அற்ப ஜந்துவான எறும்பு கூட மழை காலத்தை சந்திக்க கோடையிலேயே ஆயத்தமாவதில்லையா? தேவ பிள்ளையே, நித்தியத்தைச் சந்திக்க நீ ஆயத்தமாக வேண்டியது இப்பொழுது தான்!

''இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள்'' (II கொரி 6:2).

அத்தியாயம் 7

அந்த ஐசுவரியவான்!

ஒரு முறை சென்னையிலுள்ள மிகப் பெரிய ஆலயத்தில் நடந்த ஒரு மிகப்பெரிய பணக்காரனின் மகளது திருமணத்தில் கலந்து கொண்டேன்.

பெண்ணின் தந்தை, தனது செல்வம், செல்வாக்கு பெருமைகளையெல்லாம் அவிழ்த்து விட்டிருந்தார். கோவில் அலங்காரங்கள், அலங்கார பூந்தொட்டிகள், ஆயிரமாயிரமான மல்லிகைச் சரங்கள், தோரணங்கள் எல்லாமே அவர் பணத்தை பணமென்று பாராமல் தண்ணீரைப் போல செலவழித்திருக்கிறார் என்பதை வெளிப்படுத்தின.

திருமணத்தில் கலந்து கொள்ள வந்திருப்பவர்களை பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்ப்பதைப் போல பார்த்துக் கொண்டிருந்தேன். ஆடை அலங்காரங்களும், பளபளக்கும் சரிகை பட்டுச் சேலைகளும், கழுத்து முறிந்து விழுந்து விடுமோ என்று பயப்படத்தக்க நகைகளின் திரட்சியும், பவுடரும், லிப்ஸ்டிக்கும் மேக்கப்களும், வாசனை திரவியங்களும், விதம் விதமான கொண்டைகளும்... அந்த நவநாகரீக மங்கைகளெல்லாம் பூமியில் உள்ளவர்கள்தானா என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது என் உள்ளத்தில் ஒரு குரல், ''இவர்களுக்காக புழுக்கள் பூமியின் கீழ் காத்துக் கொண்டிருக்கின்றன'' என்று ஒலித்தது. நான் நடுங்கிப் போனேன்.

இமைப் பொழுதில் என் சிந்தனை, நினைவுகளெல்லாம் மாறிப்போனது. பவுடர் தடவிய ஒவ்வொரு முகத்திலும் ஆயிரக்கணக்கான புழுக்கள் அரித்துக் கொண்டிருப்பதைப் போல உணர்ந்தேன். அவர்கள் சரீரம் அழுகி நாற்றம் எடுப்பதைப்போல துர்வாடை எழுந்தது! அந்த ஐசுவரியவானின் கும்பல்களை ஆச்சரியத்தோடல்ல, பரிதாபமாய்

காண வேண்டியதிருந்தது! ''சௌந்தரியம் வஞ்சனையுள்ளது; அழகும் வீண்'' (நீதி 31:30). என்ற வசனம் எத்தனை உண்மையானது. எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமானது!

வேதத்தில் இயேசு கிறிஸ்து ஒரு ஐசுவரியவானின் சரித்திரத்தைக் கூறுகிறார். அது எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும்கூட, இன்னும் அந்த சரித்திரத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் ஏராளம் இருக்கின்றன!

இது உவமையல்ல; உண்மை சரித்திரம்! கர்த்தர் உவமையைக் கூறுகின்ற இடங்களிலெல்லாம், அதைக் கூறுவதற்கு முன்பே அது ஒரு உவமை என்று அவர் சொல்லி விடுவதுண்டு. ஆனால் இந்த சம்பவத்தை சொல்லுமுன்போ, பின்போ உவமையென்று அவர் சொல்லவேயில்லை. மாறாக, இந்த சரித்திரத்தில் உண்மை நபர்களின் பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவானாகிய ஆபிரகாம் இங்கு வருகிறார். லாசரு என்ற குறிப்பிட்ட பெயருடைய நபர் காணப்படுகிறார். ஆகவே, இதை ஏதோ ஒரு உவமை என்றோ, அல்லது கட்டுக்கதை என்றோ அல்லது திருஷ்டாந்தம் என்றோ ஒதுக்கிவிட முடியாது. இது கர்த்தருடைய வாயிலிருந்து வருகிறபடியால் நாம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்!

இந்தக் கட்டுரையில் நமது கவனத்தை பூமியில் ஐசுவரியனாய் வாழ்ந்த அந்த செல்வந்தனுக்கு நேராய் திருப்புவோமாக!

1. ஐசுவரியவான் பெயர்:-

இந்த சரித்திரத்தில் ஆச்சரியப் படத்தக்க ஒரு காரியம் என்னவென்றால், அவன் பெயர் அங்கு காணப்படவில்லை! விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் பெயர் உண்டு; தரித்திரனான லாசருவின் பெயருமுண்டு. ஆனால் அவன் பெயரோ அங்கு காணப்படவில்லை! ஒரு வேளை, பூமியில் அவனிருந்த போது பெரிய நன்கொடைகளைக் கொடுத்து

தன் பெயர் ஆலய கல்வெட்டுகளிலோ, பொது கட்டிடங்களின் அஸ்திபாரங்களிலோ பொறிக்கச் செய்திருக்கலாம்.

ஆனால் வேதம் அவன் பெயரை அருவருத்தது. கர்த்தர் அவன் பெயரை எழுதவோ, வெளியிடவோ கொஞ்சமும் விரும்பவில்லை! கர்த்தருக்கு அவன் பெயர் தெரியாமலா இருந்திருக்கும்? நிச்சயமாகவே தெரிந்திருக்கும். ஆனால் அவன் செய்த பாவத்தினால், அந்தப் பெயரையும் கர்த்தர் வெறுத்து ஒதுக்கினார்.

சகோதரனே, உன் பேர் புகழ் கொடிகட்டி பறக்க வேண்டும் என்று விரும்புகிறாய். ஆனால் உன் பெயர் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதா என்பதை கவனித்தாயா? வேதம் சொல்கிறது, ''ஜீவ புத்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்" (வெளி 20:15).

அந்த ஐசுவரியவானுக்கு வந்த முதல் நியாயத்தீர்ப்பு அவன் பெயர் அழிந்து போனதுதான். வேதம் சொல்கிறது, ''நீதிமானுடைய பேர் புகழ் பெற்று விளங்கும். துன்மார்க்கனுடைய பேரோ அழிந்து போகும்" (நீதி 10:7).

மட்டுமல்ல, அது அந்த ஐசுவரியவானின் மேல் வந்த சாபமும்கூட! அவனது பெயரோ, அவனது ஐந்து சகோதரர்களின் பெயரோ கூட வேதத்தில் இல்லை! எவ்வளவு பெரிய சாபம்! ஒருவன் கர்த்தரை விட்டு விலகினால், ''இந்த புத்தகத்தில் எழுதியிருக்கிற சாபங்கள் எல்லாம் அவன் மேல் தங்கும்; கர்த்தர் அவன் பேரை வானத்தின் கீழ் இராதபடி குலைத்துப்போடுவார்'' (உபா 28:20).

2. ஐசுவரியவானின் வஸ்திரம்:-

''அவன் இரத்தாம்பரமும் விலையேறப் பெற்ற வஸ்திரமும் தரித்து" (லூக் 16:19).

பூமியில் அந்த ஐசுவரியவான் உடுத்தின ஆடைகள் எத்தனை விலையேறப்பெற்றது! இரத்தாம்பர ஆடைகளை

இதுவரை நான் கண்டதே இல்லே. ஒருவர் அதனுடைய விலே மதிப்பைக் கணக்கிடும்போது ரூ. 9,000 முதல் ரூ. 12,000 வரை இருக்கக் கூடும் என்ருர். பணத்தை அத்தனே ஆடம்பரமாக செலவழித்த அவனுக்கு ஆவிக்குரிய வஸ்திரங்களே உடுத்த வேண்டுமே என்ற எண்ணமும் தாகமும் இல்லே!

அவன் நரகத்தில் எந்த ஆடையை உடுத்தியிருப்பான்? ஆம், அது அவன் சுயநீதியாகிய கந்தைகள்தான்! பூமியிலே தங்களே உடுத்தி அலங்கரிக்கிறவர்கள், இச்சைகளில் போய் விடுகிருர்கள், மற்றவர்களேயுய் இச்சிக்கத் தூண்டுகிருர்கள். இதனுல் தாங்கள் நரகத்தில் விழுவது மட்டுமல்ல, மற்றவர் களேயும் சேர்த்து இழுக்கிருர்கள்.

யாக்கோபு தனது நிருபத்தில், பொன் மோதிரமும், மினுக்கான வஸ்திரமும் தரித்திருக்கிற ஐசுவரியவானுக்கு விசேஷ இடமும், கனமும் மரியாதையும் கொடுக்க வேண் டாம் என்று எச்சரிக்கிருர் (யாக் 2:2). ‘‘ஐசுவரியவான் களே, கேளுங்கள், உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்களி னிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப் போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது. அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாய்ச் சாட்சியாயிருந்து அக்கினி யைப் போல உங்கள் மாமிசத்தைத் தின்னும்” (யாக்15:23).

பேதுரு எச்சரிக்கிருர், ‘‘மயிரைப் பின்னி, பொன்னுப ரணங்களே அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களே உடுத்துக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங் காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந் தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந் திருக்கும் குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலேயேறப் பெற்றது’’ (I பேதுரு 3:3,4).

தேவ பிள்ளையே, உலகத்தின் மேன்மையான வஸ்திரங்களை விரும்பாமல், கர்த்தர் உனக்குக் கொடுக்கிற பரிசுத்த வஸ்திரங்களைத் தரித்துக் கொள். கிறிஸ்துவின் இரத்தத்தில் தோய்க்கப்பட்ட பாவ மன்னிப்பின் வஸ்திரம் (வெளி. 19:13), ஜெயம் கொண்டவர்களுக்கான வெண் வஸ்திரம் (வெளி. 3:18), பரிசுத்தவான்களின் நீதியாகிய மெல்லிய வஸ்திரம் (வெளி 19:8), ஆகியவற்றை வாக்களித்திருக்கிறார்.

தேவ பிள்ளையே, ''அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வைகளை எனக்குத் தரித்தார்'' (ஏசா. 61:10) என்று நீ கிறிஸ்துவில் மனமகிழ்கிறாயா? இந்த ஆடைகள் காலத்தால் அழியாது. அக்கினியால் எரியாதது. இவைகள்தான் பரலோக வஸ்திரங்கள்!

உன்னதமான ஆவிக்குரிய வஸ்திரங்களைப் பற்றி கொஞ்சமும் அறியாமல் அசட்டை செய்த ஐசுவரியவான் முடிவில் நரகத்தில் தவிக்க வேண்டியதாயிற்று. அவனது பூமியில் உடுத்திய விலையேறப்பெற்ற இரத்தாம்பர வஸ்திரங்கள் இப்பொழுது எங்கே?

3. ஐசுவரியவானின் உணவு:-

''அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான்... அவன் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளாலே...'' (லூக். 16:20).

அனுதினமும் அவனுக்கு விருந்துதான்! ஒவ்வொரு நாளும் அவனுக்கு விதம் விதமான சமையல் செய்ய எத்தனை பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தார்களோ?

ஒவ்வொரு நாளும் —''அனுதினமும்'' என்று வேதம் சொல்கிறது. அவனுக்கு ஓய்வு நாள் எப்பொழுது வருகிறது என்றே தெரியவில்லை. வேதம் சொல்கிறது, ''ஆறு நாளும் நீ வேலைசெய்து உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக. ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்!'' (யாத் 20:9). ஆனால் அவனுக்கு எப்பொழுது ஓய்வு நாள் வருகிறது, எப்பொழுது சபை கூடி வருகிறது என்ற

எண்ணமே இல்லை! அவன் நினைவெல்லாம் புசிப்பும், குடிப்பும் தான்!

இயேசு எச்சரிக்கிறார், "உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும், வெறியினாலும், லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" (லூக் 21:34).

பாருங்கள், அந்த ஐசுவரியவான் சாப்பிடும்போது துணிக்கைகளெல்லாம் கீழே சிந்துகின்றன. உணவை வீணடிக்கும் பெருமையைப் பாருங்கள்! ஒருமுறை ஒருவன் சாப்பாட்டில் சற்று கறி (மாமிசம்) குறைவாயிருந்ததால் அவன் கோபப்பட்டு அந்த சாப்பாட்டு பிளேட்டை காலால் எட்டி உதைத்ததை நான் பார்த்தபோது கலங்கிப் போய் விட்டேன்.

ஐயோ, ஒருவேளை உணவுக்குக்கூட இல்லாமல் தவிப்பவர்கள் எத்தனை பேர்! பட்டினியும் பசியுமாயிருந்து சுவிசேஷம் அறிவிப்பவர் எத்தனை பேர்! உணவை மறந்து சொகுசை மறந்து, உபவாசத்தோடும் ஜெபத்தோடும் மிஷினெரிகள் ஊழியஞ் செய்து கொண்டிருக்கும்போது. இவன் அனுதினமும் சம்பிரமாய் வாழ்ந்து கொண்டிருப்பது எவ்வளவு பெரிய அக்கிரமம்! எவ்வளவு பெரிய நிர்விசாரம்!

4. ஐசுவரியவானின் மரணம்:-

"ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான்" (லூக் 16:22).

பிரேதத்திற்கு அழகிய மலர் மாலைகள், விலையுயர்ந்த தேக்கு மரத்தால் பிரேதப்பெட்டி, அடக்க ஆராதனைக்கு விசேஷ பாடகர் குழு, கல்லறையில் பதிக்க விலையேறப் பெற்ற பளிங்கு கல்...ஆனால் ஆத்துமாவின் கதி என்ன?

ஏழை தரித்திரனான லாசரு கர்த்தரை நேசித்தபடியால் அவன் மரணத்தில் ஆத்துமாவை பத்திரமாய் கொண்டு போக தேவதூதர்கள் வந்தார்கள். ஆனால் ஐசுவரியவான்

பாவத்தை நேசித்தபடியால் பிசாசுக் கூட்டங்கள் தான் வந்து இழுத்துச் சென்றிருந்திருக்கும்! வெளியே அங்கே அடக்க ஆராதனை சீரும் சிறப்புமாக நடந்து கொண்டிருந்திருக்கும். அவனது ஐந்து சகோதரர்களும் டிப்டாப்பாக ஒன்றுபோல் கறுப்பு சூட்டில் வந்திறங்கியிருப்பார்கள். உலகத்தில் அந்த ஐசுவரியவானைப் போல கொடை வள்ளல் ஒருவருமில்லை என்று சாட்சி பகிர்ந்து கொண்டிருந்திருப்பார்கள். ஆனால், அந்த வேளையில் அவன் ஆத்துமாவோ பயந்து கலங்கி, காரிருளை நோக்கி, பாதாளத்தை நோக்கி பரிதாபமாய்ச் சென்று கொண்டிருந்திருக்கும்!

தேவ பிள்ளையே, உலகப்பிரகாரமான கல்லறை நோக்கி உன் பயணம் ஒருபோதும் செல்வதில்லை! கல்லறை கட்ட செலவழிக்கும் பணத்தை, ஆத்துமாக்களை நரகத்தின் பிடியிலிருந்து மீட்கும் சுவிசேஷப் பணிக்குக் கொடுப்பது எத்தனை மேன்மையாயிருக்கும்!

நீ மரிக்கும்போது உன் ஆத்துமாவை பாதாளத்தின் பிசாசுகளல்ல, உன்னதமான தேவனுடைய தூதர்களே வரவேற்க வரவேண்டும்! கிறிஸ்துவின் குடும்பத்தில் உன்னை வரவேற்க திரளான பரிசுத்த தேவதூதர்கள் இருக்கிறார்கள் (எபிரெயர் 12:22-24; வெளி 6:9-11; II கொரி 5.8; பிலி. 1: 21-24).

5. ஐசுவரியவானின் அசட்டை:-

ஐசுவரியவான் செய்த பாவம் என்ன? வேதம் பட்டியல் போட்டு காண்பிக்கவில்லை. ஒரு மனுஷன் பிறக்கும்போதே பாவத்தில் தான் பிறக்கிறான். காரணம், தாய் அவனைப் பாவத்தில் கர்ப்பந்தரிக்கிறாள் (சங் 51:5). அதன் பின்பு நியாயப் பிரமாணத்தை மீறும் பாவங்கள் (Iயோவான் 3:4), அநீதி செய்வதால் வரும் பாவங்கள் (I யோவான் 5:17), பலவித இச்சைகளினால் கர்ப்பந்தரிக்கும் பாவங்கள் (யாக் 1:15). விசுவாசத்தால் வராதவைகளைப் பெற்றுக் கொள்ளும் பாவங்கள் (ரோமர் 14:23). மனச்சாட்சிக்கு

விரோதமான பாவங்கள் (ரோமர் 2:15) மனிதனைச் சூழ்ந்து கொள்ளுகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த ஐசுவரியவானிடம் இருந்த ஒரு முக்கியமான பாவம் யாக்கோபு 4:17ல் குறிக்கப்பட்டிருக்கிறது. அது என்ன தெரியுமா? ''ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்'' (யாக் 4:17).

தன் வாசற்படியிலே கிடக்கும் லாசருவைக் கண்டும் அவனை அசட்டை செய்ததால் பாவம் வந்தது. அவனுக்கு உணவளிக்க திராணியிருந்தும், அதைச் செய்யாமல், மேஜையின் துணிக்கைகளை பொறுக்க விட்டானே அதுதான் பாவம்.

பாவ அறிக்கை ஜெபத்தில் இரண்டு காரியங்களை அறிக்கையிடுகிறோம். ஒன்று, செய்யத்தக்கவைகளைச் செய்யாமை; அடுத்தது, செய்யத் தகாதவைகளையே செய்து வருவது! இந்த ஐசுவரியவானின் பாவம் முதல் வகையைச் சேர்ந்தது. செய்யத் தக்கவைகளை செய்யாமை! அந்த ஆமை கொடிய ஆமை; நரகத்திற்குள் இழுத்து சென்று விடும்.

பூமியில் லாசரு பிச்சைக்காரனைப்போல கிடந்தான். நித்திய நரகத்தில் ஐசுவரியவான் பிச்சைக்காரனைப் போல கிடந்து, ''தண்ணீர்'' பிச்சை கேட்டான்! இந்த இரண்டு பிச்சைக்காரர்களின் சரித்திரத்தில் பரிதாபமான பிச்சைக்காரன் ஐசுவரியவான்தான்!

வேதம் சொல்கிறது, ''ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக் கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்பட மாட்டான்'' (நீதி 21:13).

6. ஐசுவரியவானின் வேதனை:-

''அவன் பாதாளத்தில் வேதனைப் படுகிறபோது...'' (லூக் 16:23).

நரகத்தைப் பற்றியோ, பாதாள வேதனையைப் பற்றியோ, சிந்திப்பதற்கு பூமியிலே அவனுக்குக் கொஞ்சமும் நேரமில்லாதிருந்தது. யாராவது சொல்ல வந்திருந்தால் எரிந்து விழுந்திருப்பான்!

ஒரு முறை ஓர் ஊழியர் எனக்கு ஏராளம் கிறிஸ்தவ கைப்பிரதிகளை (Tracts) அனுப்பிக் கொடுத்தார். ஒவ்வொரு நாளும் நான் காலை நேரத்தில் ஓடும் ரயிலில் இரண்டு மணி நேரம் விநியோகிப்பதுண்டு. அதில் ஒரு பிரதியின் பெயர், ''மரணத்திற்குப் பின்'' என்பது! ஒருவராவது அதை வாங்கவோ, வாசிக்கவோ பிரியப்படவே இல்லை. தலைப்பைப் பார்த்ததுமே ஜன்னல் வழியாக வீசியெறிவார்கள். அவர்கள் சில வேளைகளில் வசைபாடும் வார்த்தைகளும் என் காதில் கேட்கும். ''ஆமாம், அபசகுனமாய் எதைக் கொடுக்கிறான் பாருங்கள், சாவுகிராக்கி" என்பார்கள்.

மரணத்தைப் பற்றியோ, நரகத்தைப் பற்றியோ நினைக்கவோ சிந்திக்கவோ ஜனங்கள் விரும்புவதேயில்லை. அப்படிப் பட்ட பிரசங்கங்களைக் கேட்கவும் பிரியப்படமாட்டார்கள். ஆனால் முடிவில்...

மனம் திரும்பாத மனிதனே! இதைக் கருத்தாய்ப் படி! நீ பாவத்தில் மரித்தால், உனக்கு அக்கினி கடல்தான் பங்கு! அங்கு அவியாத அக்கினி, சாகாத புழு, அழுகையும் பற்கடிப்பும் உண்டு!

7. ஐசுவரியவானின் பிரிவு:-

''தூரத்திலே ஆபிரகாமையும், அவன் மடியிலே லாசருவையும் கண்டான்" (லூக் 16:23).

தூரத்திலே கண்டான் என்று வேதம் சொல்லுகிறது. ஆம், அந்த பிரிவு ஒரு நித்தியமான பிரிவு. மட்டுமல்ல, ஆபிரகாம் கூறினார், ''இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்கு கடந்து போகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்க-

ளுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பிளப்பு உண்டாக்கப் பட்டிருக்கிறது'' (லூக் 16:26).

பூமியில் பரிசுத்தவான்களும், துன்மார்க்கரும் அருகில், மிக அருகில் தான் இருக்கிறார்கள். ஐசுவரியவானின் வீட்டில் மிக அருகில் தான் லாசரு கிடந்தான். பூமியில் இரட்சிப்பு அருகில் இருக்கிறது. கர்த்தரும் அருகில்தான் இருக்கிறார். வேத வசனங்கள் அருகில் கிடைக்கிறது. ஆனால் இந்த கிருபையின் நாட்களில் அதைப் புறக்கணித்து விட்டு மரித் தாலோ அவை யாவும் மிகத் தூரத்தில்- எட்டாத மிகத் தூரத்தில் போய்விடுகிறது! நித்தியமான பிரிவினை!

நரகத்தில் மனிதன் தேவனை நித்தியமாக இழந்து போகி றான். ஆ! அந்த அன்புள்ள ஆத்தும நேசரை என்றென்றும் பிரிந்திருப்பது எவ்வளவு கொடிய வேதனை! ஸ்பர்ஜன் சொன்னார், 15 நிமிடங்கள் கூட என்றால் கிறிஸ்துவின் பிரசன்னத்திலிருந்து விலகி ஜீவிக்க முடியாது. ஒவ்வொரு வினாடியும் அவர் எனக்கு வேண்டும் என்றார்.

தேவபிள்ளையே, பூமியில் ஒரு போதும் கிறிஸ்துவை விட்டு, கிறிஸ்துவின் அன்பை விட்டுப் பிரிந்திராதே! ஒரு வேளை பாவமாகிய தடுப்புச் சுவர் குறுக்கே வருமானால் அதை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் உடைத்து எறி. ஒரு போதும் கிறிஸ்துவற்ற ஜீவியம் செய்யாதே! அவ்வப் போது உன் நிலையை தேவ சமுகத்தில் ஆராய்ந்து பார்த்து, தேவனோடு நல்மனம் பொருந்து!

இன்று உன்னை ஆறுதல் படுத்த ஆவியானவர் இருக்கிறார். ஆயிரம் ஆயிரமான ஊழியர்கள் இருக்கிறார்கள். ஆனால் நரகத்தில் உனக்கு யாருண்டு? எல்லா பரிசுத்தவான்களும் உன்னை விட்டுப் பிரிந்து பரலோகத்திற்குப் போய்விடுவார் களே... பக்தியாய் ஜீவித்த உன் உறவினர் பரலோகத்திற்கு போய்விடுவார்களே...

தனிமை உணர்ச்சி பொல்லாதது. அது உள்ளத்தை உருக்கிவிடும். புதிதாக திருமணமான ஒரு சகோதரி எனக்கு

எழுதிய கடிதத்தில், ''ஐயோ, என் கணவருடன் ஒரு மாதமே நான் ஒன்றாயிருந்தேன். தற்பொழுது வேலையினிமித்தம் அவர் வட இந்தியாவில் இருக்கிறார். தனிமை உணர்ச்சி என்னைக் கொல்லுகிறது'' என்று குறிப்பிட்டாள். பூமியிலுள்ள இப்படிப்பட்ட சிறிது கால பிரிவுகளே இவ்விதமாக வேதனையுறச் செய்யுமானால், நித்தியமான பிரிவு...? அதிலும் தேவனை நித்தியமாய்ப் பிரிவதென்றால்...? ஐயோ, நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நாளானாலும் சரி, அல்லது மரணமானாலும் சரி... அது பாவிகளையும், பரிசுத்தவான்களையும் என்றென்றுமாக பிரித்துவிடும்!

வேதம் சொல்லுகிறது, ''மனுஷ குமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள்'' (மத் 13:41-43).

8. ஐசுவரியவானின் ஜெபம்:-

ஆபிரகாமைப் பார்த்து ஜெபித்த பல ஜெபங்கள் இந்த பகுதியில் இருக்கின்றன.

''தண்ணீர் தாரும்...''

''நாவைக் குளிரப் பண்ணும்...''

''லாசருவை என் தகப்பன் வீட்டிற்கு அனுப்பும்...''

நரகத்திலிருந்து ஏறெடுக்கப்படும் ஜெபம் எதுவாயிருந்தாலும் அவற்றால் எந்தபிரயோஜனமும் இல்லை. கோடிக்கணக்கான ஜெபங்களை ஏறெடுத்தாலும் அவற்றால் எந்த விளைவுகளும், மாற்றங்களும் நேரிடப்போவதில்லை. ஜெபம் கேட்கப்படவும் மாட்டாது. இது எத்தனை பரிதாபம். யாரும் உதவிக்கு வரப்போவதுமில்லை. துயரம் என்றென்றும் நீங்குவதுமில்லை.

பூமியில் தான் நமக்கு வாக்குத்தத்தங்கள் உண்டு. நரகத்தில் இல்லை. பூமியில் தான் நம் ஜெபத்தைச் சுமந்து செல்ல பரிசுத்த ஆவியானவர் உண்டு. நரகத்தில் இல்லை! பூமியில் தான் தேவனுடைய பிள்ளைகளின் அன்பின் ஐக்கியமும் ஒருமனமான ஜெபமும் உண்டு. நரகத்தில் இல்லை.

இந்த ஐசுவரியமானது சம்பாஷணையைப் பார்த்தால், இவன் ஒரு காலத்தில் ஆவிக்குரிய கூட்டங்களுக்குச் சென்று பல அருமையான சாட்சிகளைக் கேட்டு உணர்த்தப்பட்டு, மனம் திரும்பி, பின்னுல் ஐசுவரிய மயக்கத்தால் பின் வாங்கிப் போனவன் என்று தெரிகிறது. ஆபிரகாமை எப்படி அழைக்கிருன் என்று கவனித்தீர்களா? ''தகப்பனுகிய ஆபிரகாமே..." என்று.

தேவ அன்பை ருசித்து, பின் மாறிப்போகிறவனுக்கு எத்தனை அதிகமான ஆக்கினைத் தீர்ப்பு உண்டு!

9. லாருவை அனுப்புங்கள்:-

ஐயா ஆபிரகாமே, லாசருவை அனுப்புங்கள்!

நரகத்தில் அக்கினி ஜுவாலையில் கொடிய தாகத்தினுல் தவித்துக் கொண்டிருந்த போது தான் அந்த ஐசுவரியவானுக்கு பெரிய ஆத்தும பாரம் உண்டானது! அப்பொழுது தான் ஆத்துமாவின் நித்திய நிலை என்ன என்பதை உணர்ந்தான்!

நித்திய நித்தியமாய் அந்த அக்கினி கடலே அவனது பங்கு என்று அறிந்து, மற்ற ஆத்துமாக்கள் அங்கு வந்து விடக்கூடாதே என்று கரிசனைப்பட்டான். அவனது ஆத்தும கதறல் தான் —

ஐயா ஆபிரகாமே, லாசருவை அனுப்புங்கள்!

பூமியிலிருக்கும் போது மிஷனெரி பணியைக் குறித்து அறிய அவனுக்கு நேரமில்லை; பணம் கொடுத்து மிஷனெரிகளை அனுப்ப மனமும் இல்லை. அன்று பல மிஷனெரி இயக்கங்கள் ''போ அல்லது அனுப்பு" ''போ, அத்துடன்

அனுப்பு'' என்று எவ்வளவு விநோதமாய் ஊதினாலும் இவன் செவிட்டு விரியனைப்போல காதுகளை அடைத்துக் கொண்டான். இப்பொழுது நரக கடலில் தான் மிஷனெரி பணியின் அவசியம் என்ன என்பது அவனுக்குப் புரிந்தது. அந்த மிஷனெரி ஏக்கத்தின் வாஞ்சை தான். ஐயா ஆபிரகாமே, லாசருவை அனுப்புங்கள்!

ஆம், அந்த ஐசுவரியவானுக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு. அவர்களிடம் திரளான பணம், செல்வம், செல்வாக்குகள் உண்டு. ஆனால் அவர்களிடம் இந்த நரகக் கடலுக்கு தப்புவிக்கக் கூடிய கிறிஸ்து இல்லையே, இரட்சிப்பு இல்லையே.

ஐயா ஆபிரகாமே, லாசருவை அனுப்புங்கள்!

அந்த ஐசுவரியவானுக்கு தகப்பன் வீடும் இருந்தது (லூக். 16:26). அதில் வயதான தாய் தகப்பனார் இருந்திருக்கலாம்! ஐயோ வயது முதிர்ந்த அவர்கள் ஒரு தலைவலியைக்கூட தாங்கிக் கொள்ள மாட்டார்களே! கொஞ்சம் வெப்பத்தைக் கூட சகித்துக் கொள்ள மாட்டார்களே! ஐயோ, அவர்கள் இந்த அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே எப்படி இந்த அகோர வேதனையை நித்தியமாய் சகிப்பார்கள்? அவர்களை இரட்சிப்பிற்குள் வழி நடத்த —

ஐயா ஆபிரகாமே, லாசருவை அனுப்புங்கள்!

லாசருவை அனுப்பினால் தான் என் சகோதரர்களும் தகப்பன் வீட்டாரும் கவனிப்பார்கள். மரித்தோரிலிருந்து எழுந்து வருவது அவர்களுக்கு ஆச்சரியமாய் கவர்ச்சியாய் இருக்கும்! மற்றப்படி தெருப்பிரசங்கிமார் அவர்களுக்கு பைத்தியக்காரர்களாய்த் தோன்றுவார்கள். அமெரிக்கப் பணத்தை வாங்கிக் கொண்டு கத்தும் கைக்கூலிக் கழுதைகள் என்று அசட்டை செய்து விடுவார்கள். ஆகவே—

ஐயா ஆபிரகாமே, லாசருவை அனுப்புங்கள்!

வேதம் சொல்கிறது, ''தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும்... நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" (பிரசங்கி 12:1).

அன்று ஆபிரகாம் லாசருவை அனுப்பவில்லை! ஆனால், அன்புள்ள பிதா தன் ஒரே பேறான குமாரனை நமக்காக அனுப்பியிருக்கிறார். அவரை ஏற்றுக்கொள்வோமா? நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வோமா? (யோவான் 3:16).

அத்தியாயம் 8

சடுதியிலே, எச்சரிப்பின்றி ...!

வாழ்க்கையில் சில காரியங்கள் நிதானமாகவும் போதுமான அறிவிப்புடனும் மெதுவாகவும் சம்பவிக்கிறது. ஆனால் சில காரியங்களோ உடனடியாக நேரிட்டுவிடும்.

மரண தூதன் சொல்லிவிட்டு வருவதில்லை. எதிர்பாராத விபத்துக்கள் எச்சரிப்பு கொடுத்து பின் வருவதில்லை. சடுதியாக மனுஷனுக்கு நடக்கிற காரியங்களை நாம் உலகெங்கும் காண்கிறோம். வேதம் அதைக் குறித்து நமக்கு திட்டமும் தெளிவுமாய் எச்சரித்துக் கொண்டேயிருக்கிறது. வேதம் சொல்கிறது, ''தன் காலத்தை மனுஷன் அறியான்; மச்சங்கள் கொடிய வலையில் அகப்படுவதைப் போலவும் குருவிகள் கண்ணியில் பிடிபடுவது போலவும், மனுப்புத்திரர் பொல்லாத காலத்திலே சடுதியில் தங்களுக்கு நேரிடும் ஆபத்தில் அகப்படுவார்கள்" (பிரசங்கி 9:12).

1. சடுதி ஆபத்து:-

எனக்கு ஒரு அருமையான ஊழியக்காரரைத் தெரியும். ஒரு முறை அவர் ஆலய கட்டுமான நிதிக்காக அவருடைய சபையினர் கொடுத்த நகைகளை விற்கும்படி சென்னை வந்திருந்தார். நான் அவரைக் கூட்டிக் கொண்டு தெரிந்த ஒரு பாங்க் அதிகாரியிடம் சென்றேன். அந்த பாங்க் அதிகாரி அந்த நகைகளுக்கு நல்ல பணம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். அப்பொழுது அந்த ஊழியர், கிறிஸ்துவைக் குறித்தும் எதிர்பாராத மரணங்களைக் குறித்தும் அந்த பேங்க் அதிகாரிக்கு உருக்கமாக எடுத்துச் சொன்னார். ஆனால் அந்த அதிகாரி அவைகளை கேட்டாரேயொழிய, தன் இருதயத்தை இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. எனினும் அந்த நகைகளை நல்ல விலைக்கு அவர் வாங்கிக் கொண்டார்.

சில நாட்களுக்குப் பின்பு அந்த ஊழியருக்கு இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்து போனது. எவ்வளவோ சிகிச்சை அளித்தும் பலனில்லை. மரண நேரத்தின் கடைசி நாட்களில் நான் அவரோடுகூட அதிகநேரம் செலவிட்டேன். அப்போது அவர் என்னிடம் சொன்னார், "பூமியில் என்னுடைய நாட்க முடிகிறது. தேவ தூதர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். நான் இனி பரலோகத்தில் சென்று கர்த்தருக்கு பணிவிடைச் செய்யப் போகிறேன்" என்று மிகுந்த உற்சாகமாகவும், சந்தோஷமாகவும் சொல்லிக்கொண்டிருந்தார். அடுத்த நாள் அவர் பூமியை விட்டு நித்தியத்திற்கு கடந்து சென்றார். அவர் அவ்வளவு துரிதமாய் இறந்துவிடுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவருக்கு நித்தியத்தைக் குறித்த - பரலோகத்தைக் குறித்த நிச்சயம் இருந்தது.

நான் அவர் மரணச் செய்தியை அந்த பேங்க் அதிகாரியிடம் சொன்னபோது, அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார். இவ்வளவு சீக்கிரத்தில் அவர் இறந்துவிட்டாரா? என்னோடு பேசி சில மாதங்கள்தானே ஆகிறது? இவ்வளவு சடுதியில் மரணம் வருமா? என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு சில நாட்கள் கடந்து சென்றது. அந்த பேங்க் அதிகாரி தன் மனைவியை அவள் வேலை செய்கிற ஸ்தலத்தில் இறக்கி விட்டுவிட்டு தான் வேலை செய்கிற பேங்குக்கு திரும்பும்போது ஒரு பஸ் அவரை அடித்து, அவர் தலையின் மேல் ஏறிச்சென்று விட்டது. அவர் தலையில் அணிந்திருந்த கவசமும் நொறுங்கிப் போயிற்று. நடுரோட்டில் அனாதையாய் மரித்துக் கிடந்தார்.

சென்னை மத்திய மருத்துவ மனையில் பிரேத பரிசோதனையின்போது அவர் சரீரம் அறுக்கப்பட்டுக் கிடந்த நிலைமையைப் பார்த்தேன். என்னுடைய உள்ளம் தாங்க இயலாத துயரத்தால் துடித்தது. ஏனெனில், அவர் மரணத்தைக் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்க மாட்டார். சடுதியில் அவர் வாழ்வு சரிந்தது! அவர் நித்தியத்தை எங்கே

செலவிடுவார் என்று எண்ணி எண்ணி தேம்பிக் கொண்டிருக்கிறேன்.

உலகத்திலுள்ள பெரிய மாயையான காரியம் என்னவென்றால், மனுஷன் தனக்கு வருகிற சடுதியான ஆபத்தைக் குறித்து அறியாதிருப்பதுதான். அவன் தன் வாழ்க்கையின் முடிவு நாள் எப்போது என்று தெரியாமலிருக்கிறபடியினால் மனம் போல ஜீவித்துக் கொண்டிருக்கிறான்.

ஒருமுறை தூக்குத் தண்டனையை எதிர்நோக்கிக் கொண்டிருந்த கைதி சொன்னான், ''எனக்கு தூக்குத் தண்டனை எப்போது என்று அதிகாரிகள் அறிவித்தபோது மரண பயம் என்னைப் பிழிய ஆரம்பித்தது. நான் பயத்தோடு மரணத்தைச் சந்திக்க ஆயத்தமானேன். ஆனால் சிறைக்கு வெளியில் வாழ்கிற மக்களுக்கு மரணம் எப்போது என்று தெரியாதபடியினால் மரணமே தங்களுக்குச் சம்பவிக்காது என்று நிர்விசாரத்தோடு ஜீவிக்கிறார்கள்'' என்றான். இது எத்தனை உண்மை!

நோவாவின் காலத்தில் வரப்போகிற ஜலப்பிரளயத்தை குறித்து நோவா நூற்றுஇருபது வருடங்கள் பிரசங்கித்தார். ஆனால் ஜலப்பிரளயம் வரும் நாளோ, நாழிகையோ ஜனங்களுக்கு தெரிவிக்கப்படாதிருந்தது. ஒரு நாள் திடீரென்று நோவாவின் பேழையின் கதவுகள் அடைக்கப்பட்டது வானத்தின் ஊற்றுக்கண்கள் திறக்கப்பட்டது. நாற்பது நாட்கள் தொடர்ந்து மழை பெய்து, கீழ்ப்படியாமல் போனவர்களையெல்லாம் அழித்தது. சடுதியில் ஆபத்து சந்தித்த பின்பு, அவர்கள் கண்கலங்கி பிரயோஜனம் என்ன? தேவபிள்ளையே, இப்போது கிருபையின் காலத்தை நீ பயன்படுத்திக் கொள்ள தவறுவாயென்றால் நித்தியத்தை நீ எவ்விதமாய்ச் சந்திப்பாய்? உன் காலமெல்லாம் உன் மனசாட்சி உன்னை வாதிக்கும். கிறிஸ்து உனக்குக் கொடுத்த தருணங்களை வீணாக்கி விட்டதைக் குறித்து உன் உள்ளம் உறுத்திக் கொண்டேயிருக்கும். வேதம் உன்னை எச்சரிக்கிறது, அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும், தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடுதியில் நாசமடைவான் (நீதி. 29:1)

ஏசாயா சொல்கிறார்: என்னைப் பார்க்கிறவர் ஒருவருமில்லை என்றாய். தீங்கு உன் மேல் வரும். அது எங்கிருந்து உதித்தது என்று நீ அறியாய். விக்கினம் உன் மேல் வரும். நீ அதை நிவர்த்தியாக்கமாட்டாய். நீ அறியாதபடிக்கு சடுதியாக உண்டாகும் பாழ்க்கடிப்பு உன் மேல் வரும் (ஏசாயா 47:10,11).

எரேமியா புலம்பி கூறுவதையும் கேள். ''என் ஜனமாகிய குமாரத்தியே, நீ இரட்டை கட்டிக்கொண்டு சாம்பலிலே புரண்டு ஒரே புத்திரனுக்காக துக்கிக்கிறது போல மனம் கசந்து புலம்பு. பாழாக்குகிறவன் சடுதியாய் வருவான்'' (எரேமியா 6:26).

2. துன்மார்க்கருக்கு சடுதியான அழிவு:-

பூமியில் துன்மார்க்கர் செழித்திருக்கும்போது அநேக தேவபிள்ளைகள் துன்மார்க்கரைப் பார்த்துப் பொறாமைப்படுவதுண்டு. ''கர்த்தர் அவர்களையெல்லாம் வாழ வைத்திருக்கிறார்; துன்மார்க்கர் கொழுத்து திரிகிறார்களே என்றெல்லாம் எண்ணுகிறதுண்டு. ஒருபோதும் அப்படி எண்ணாதே. ஏனெனில் அவர்களுடைய அழிவு இமைப்பொழுதிலே சடிதியாய் அவர்கள் மேல் வரும்.

தாவீது ராஜா அவ்விதமாக துன்மார்க்கரைக் கண்டு ஏன் அவர்களுக்கு பசுமையான வாழ்வு என்று எண்ணினார். ''துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில் வீம்புக்காரராகிய அவர்கள் மேல் பொறாமை கொண்டேன். அவர்கள் முடிவைக் கவனித்துணரும் அளவும் என் பார்வைக்கு விசனமாக இருந்தது. நிச்சயமாகவே நீர் அவர்களை சறுக்கலான இடங்களில் நிறுத்தி பாழான இடங்களில் விழப்பண்ணுவீர். அவர்கள் ஒரு நிமிடத்தில் எவ்வளவு பாழாய் போகிறார்கள். பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள்" (சங். 73:3-19).

வேதம் சொல்கிறது: ''சடிதியில் அவனுக்கு ஆபத்து வரும்,சகாயமின்றி சடிதியில் நாசமடைவான்'' (நீதி. 6:19).

எனக்கு ஒரு சிறிய குடும்பத்தினரைத் தெரியும். ஏழை கிறிஸ்தவ குடும்பம். கணவனார் வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர். அவர்களுக்குள்ள இரண்டு பையன்களும் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வீட்டிற்கு விரோதமாக ஒரு பெரிய ரௌடி எழும்பினான். பட்டப் பகலில் அந்த வீட்டை கொள்ளையிட்டான். அந்தக் குடும்பத்தினர் ஊக்கமாய் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் இழந்துபோன பொருட்களையெல்லாம் திரும்ப தரவேண்டுமென்று மன்றாடினார்கள். கர்த்தர் ஆச்சரியமாய் அந்த ரௌடியை பிடிபடச் செய்தார். அவர்கள் பொருட்கள் அவர்களுக்குத் திரும்ப கிடைத்தது.

சில காலம் சிறை தண்டனையடைந்த அந்த கைதி வெளியிலே வந்தபோது இந்த குடும்பத்திற்கு விரோதமாய் மூர்க்கமாய் எழும்பி வந்தான். அந்த ரௌடியோடுகூட ஏராளம் ரௌடிகளும் சேர்ந்து கொண்டார்கள். இந்தக் குடும்பத்திலுள்ள பிள்ளைகளை கொலை செய்யப்போவதாகவும், குடும்பத்தையே இல்லாதபடி அழித்து விடுவதாகவும் அவன் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான். மட்டுமல்லாமல், மந்திரவாதிகளிடம் கூட சென்று இந்த வீட்டிற்கு விரோதமாக செய்வினை செய்தான். இந்த சிறிய குடும்பத்தினரால் எந்த விதத்திலும் அந்த ரௌடி கும்பலை எதிர்த்து நிற்க முடியவில்லை. அவர்கள் ஊக்கமாக ஜெபித்தார்கள். எனக்கும் இன்னும் அநேக ஜெப ஊழியர்களுக்கும் கடிதம் எழுதி ஊக்கமாய் ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

அவ்வளவு பெலமுள்ள அந்த துன்மார்க்கனின் மேல் கர்த்தருடைய நியாயத் தீர்ப்பு இமைப்பொழுதில் வந்தது. அவன் ஓட்டிக்கொண்டு சென்ற காரின் மேல் இன்னொரு கார் வந்து மோதியது. அவன் அந்த இடத்திலே மரித்துப் போனான். வேதம் சொல்லுகிறது: "உத்தமனுடைய நீதி அவன் வழியைச் செவ்வைப்படுத்தும்; துன்மார்க்கனோ தன் துன்மார்க்கத்தினால் விழுவான்" (நீதி. 11:5).

3. சடுதி வருகை:-

கிறிஸ்துவினுடைய வருகையும் சடுதியாகவே இருக்கும். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக கிறிஸ்து வினுடைய வருகை பிரசங்கிக்கப்படுகிறது. ஆனால் அவர் வரும் நாளோ நாழிகையோ நமக்குத் தெரியாது. நினையாத நாழிகையிலே அவருடைய வருகை இருக்கும். அந்த நாளில் கிறிஸ்துவினுடைய வருகைக்கு ஆயத்தமில்லாதவர்களின் நிலைமை பரிதாபமாய் அல்லவா முடியும்? ஒரு கிறிஸ்தவனு வது சாக்குப்போக்குச் சொல்லவே முடியாது. ஏனெனில் இந்த நாட்களில் திரும்புமிடமெல்லாம் வருகையைக் குறித்து பிரசங்கங்கள் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. வருகையைப் பற்றிய தரிசனங்கள் நிறைவேறிக் கொண்டேயிருக்கிறது! உலகத்தின் எல்லா சம்பவங்களும் இயேசு வரப்போகிறார் என்று இடைவிடாமல் உணர்த்திக் கொண்டேயிருக்கிறது.

கிறிஸ்துவினுடைய வருகை அவ்வளவு திடீரென்றிருக்கும்; துரிதமாயிருக்கும். இயேசு அதை மின்னலுக்கு ஒப்பிட்டுச் சொன்னார். ‘‘மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷக் குமார னுடைய வருகையும் இருக்கும்.’’ (மத். 24:27). ஆகவே அவர் அன்போடு கூட ஆலோசனை கூறுகிறார், ‘‘நீங்கள் நினையாத வேளையிலே மனுஷக்குமாரன் வருவார்; நீங்கள் ஆயத்தமாக இருங்கள்’’ (மத். 24:44).

‘‘கடைசி எக்காளம் தொனிக்கும்போது ஒரு நிமிடத் திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக் கப்படுவோம். எக்காளம் தொனிக்கும்; அப்பொழுது மரித் தோர் அழிவில்லாதவர்களாக எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்’’ (I கொரி. 15:51,52).

தேவபிள்ளையே, சடுதியாய் வருகிற மரணமோ, சடுதி யாய் வருகிற ஆபத்தோ, சடுதியாய் வருகிற வருகையோ- நீ கிறிஸ்துவிற்குள் ஜீவிப்பாயென்றால் பயப்பட வேண்டிய தில்லை. நீ தைரியமாய் என் மீட்பர் உயிரோடிருக்கிறார்,

நான் அவரைக் காண்பேன் என்ற விசுவாசத்தோடு முன்னேறிச் செல்லலாம்.

ஒருவேளை, நீ அப்படி ஆயத்தமில்லாமல் இருப்பாயென்றால், இந்த வேளையிலே மனம் திரும்பி இயேசு கிறிஸ்துவை நோக்கி கதறி அழுது அவருடைய இரட்சிப்பைப் பெற்றுக் கொள். அப்போது நீ நரகத்திற்கும் பாதாளத்திற்கும் தப்புவிக்கப்படுவாய். தீர்மானம் செய்ய வேண்டிய பொறுப்பு உன் கைகளில் இருக்கிறது!

நீ கெட்டுப் போவதை கர்த்தர் விரும்பவில்லை! உன் பாவ நிவாரணத்தை கல்வாரியிலே நிறைவேற்றினார். அவர் உன் பாவங்களை மன்னித்து உன்னை பரிசுத்தவானாக மாற்றுவார். உன்னை பிரகாசிக்கச் செய்வார்.

கசப்பான உண்மைகள்!

நரகத்தைக் குறித்த சில ''கசப்பான உண்மைகளை'' தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். அந்த உண்மைகள் பாவத்தை விட்டு நம்மை விலகி ஓடச்செய்யும். மற்றவர்களை யும் எச்சரித்து பாதுகாக்கும்.

1. நரகம் ஏன்?

ஒன்றை திட்டமாக அறிந்து கொள்ளுங்கள். நரகம் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டதல்ல. அது சாத்தானுக் காகவும் அவன் சேனையாகிய பிசாசு கூட்டங்களுக்காகவும் உண்டாக்கப்பட்டது. ஆனால் எந்த ஒரு மனுஷன் கர்த்தரைப் புறக்கணித்து, சாத்தானின் வழிகளாகிய பாவ துன்மார்க்க வாழ்க்கையைத் தெரிந்து கொள்ளுகிறானோ, அவனும் சாத்தானோடு நரகத்தில் இறங்குகிறான். அவர்கள் கர்த்தருடைய கிருபையையும், சுவிசேஷத்தையும் தள்ளிப் போடுகிறபடியால் ஒரு நாள் கர்த்தர் அவர்களைப் பார்த்து ''சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு பிசாசுக்காகவும்; அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்'' என்பார் (மத். 25:41).

''பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினி!'' - அது தான் நரகம்.

இன்று நமது அரசாங்கங்கள் ஜெயில்களை, போலீஸ் ஸ்டேஷன்களை, கோர்ட்டுகளை வைத்திருக்கிறது. காரணம் என்ன?

துன்மார்க்கனை துன்மார்க்கத்திலிருந்து திருப்புவதற்காக நல்லவர்களைப் பாதுகாப்பதற்காக! நாம் வாழும் சமுதாயத்தை மேன்மையுடையதாக மலரச் செய்வதற்காக!

ஜெயிலோ போலீஸோ இல்லாமற் போனல் சமுதாயம் குழப்பமடைந்து போகும். சாதாரண மக்கள் உள்ளத்தில் தண்டனையைக் குறித்த பயமில்லாமற்போய், சட்டதிட்டங்களை மதிக்கவும் மாட்டார்கள்; கீழ்ப்படியவும் மாட்டார்கள். முடிவில் அரசாங்கம் ஸ்தம்பித்துப் போகும்!

ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் சட்டதிட்டமுண்டு. அதை செயல்படுத்தாத பட்சத்தில் தண்டனையுமுண்டு.

அதுபோல பரலோக அரசாங்கத்திற்கும் சட்டதிட்டமுண்டு. கிறிஸ்துவை அறியாத மக்கள் உள்ளத்திலே அந்த சட்ட திட்டததை கர்த்தர் ''மனச்சாட்சியாக" வைத்திருக்கிறுர். மனச்சாட்சியை மீறுவது பாவமாகிறது!

இஸ்ரவேலருக்கு நியாயப் பிரமாணத்தை வைத்திருந்தார். பத்துக் கற்பனைகளை மீறுவது அவர்களுக்குப் பாவமாயிருந்தது!

நமக்கு பிரமாணமாக வேத புத்தகத்தைத் தந்திருக்கிறுர். நாம் அந்த வசனங்களின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுவோம், வானமும், பூமியும் ஒழிந்து போனலும் கர்த்தருடைய வார்த்தைகள் ஒருபோதும் ஒழிந்து போவதில்லை.

ஒருவன் பாவம் செய்யும்போது வேத வசனங்களை அவமதிக்கிறுன். இரட்சிப்பை பார்க்கிலும் பாவ இச்சைகளைத் தெரிந்து கொள்கிறுன். பரிசுத்தத்தைப் பார்க்கிலும் அசுத்தத்தை மேன்மையாக எண்ணுகிறுன். கிறிஸ்துவைப் பார்க்கிலும் சாத்தானை சார்ந்து கொள்ளுகிறுன். ஆகவே, அவனை கர்த்தர் பரிசுத்த ஜனத்திலிருந்து வேறு பிரிக்க வேண்டியதிருக்கிறது!

ஒரு பழ வியாபாரி அழுகிய பழத்தை நல்ல பழங்களோடு சேர்த்து வைப்பதில்லை; வேறு பிரிக்கிறுன். வீடுகளிலே செத்து நாறும் பிரேதங்களை உயிருள்ளவர்களோடு வைத்திராமல் கொண்டு போய் புதைக்கிறுர்கள்.

அதுபோலவே கர்த்தர் துன்மார்க்கரையும், தேவனுடைய பிள்ளைகளையும் வெவ்வேறாய் பிரிக்கிறார். களைகளை கோதுமை மணியிலிருந்து பிரித்து அப்புறப்படுத்துகிறார். வெள்ளாடுகளையும் செம்மறியாடுகளையும் பிரிக்கிறார்.

நீங்கள் சொல்லுங்கள், உங்கள் பிள்ளைகளை ஒரு குஷ்டரோகி, தன் அழுகிய நாற்றமெடுக்கும் கரத்தால் தூக்கி அணைத்து முத்தமிட நீங்கள் இடங்கொடுப்பீர்களா? இல்லை. அப்படியே குஷ்டரோகி வந்தால், அவனை துரத்திவிடுவீர்கள். அதுபோலவே, கர்த்தர் தன் அருமை பிள்ளைகளை அரவணைத்து பரலோகத்திற்குக் கொண்டு செல்கிறார். பாவக்குஷ்டத்தால் சாத்தானுக்கு அடிமைப்பட்டவர்களை நரகத்தில் தள்ளுகிறார்.

நரகம் அவசியமல்லவா? அதற்காக நாம் நரகத்திற்கு செல்லுகிறவர்களைக் குறித்து அக்கறையில்லாமலோ, அனுதாபமில்லாமலோ இருப்பதில்லை! அவர்களை மீட்க நம்மால் எவ்வளவு பிரயாசம் எடுக்க வேண்டுமோ, அவ்வளவு பிரயாசம் எடுத்தே தீரவேண்டும். அதே நேரத்தில் நம்மால் கர்த்தர் நரகத்தை உண்டு பண்ணி வைத்திருக்கிறாரே என்று குறை கூற முடியாது!

அநேகர், நரகம் இல்லாத ய்விசேஷத்தை கூறுகிறார்கள். இது கள்ள உபதேசம். ஒன்றை அறிந்து கொள். மனம் திரும்புதலும், பாவ மன்னிப்பும் இல்லாத இரட்சிப்பு, நீதி இல்லாத கிருபை, பரீட்சை இல்லாத தேர்வு, சிலுவையில்லாத சிங்காசனம், பாடுகளில்லாத பரலோகம், நரகமே இல்லாத நித்தியம் இவை யாவும் சாத்தானின் வஞ்சக

2. யார் யார் வருவார்கள்?

ஒரு போதகரிடம் நவ நாகரீகப் பெண்மணி வந்தாள். கையில்லாத ரவிக்கையும், விலையுயர்ந்த பகட்டான ஆடையும் அணிந்திருந்த அவளிடமிருந்து செண்ட்வாசனை பரிமளித்தது. அவள் சொன்னாள்: ''பாஸ்டர், ஞாயிறு ஆராதனைக்கு வரமுடியவில்லை; நிறைய விருந்தினர். இன்று முக்கியமான

''பார்ட்டிக்குப்'' போக வேண்டும். அங்கு மந்திரி மனைவி, கலெக்டர் மனைவி, இன்னும் High class Society யிலுள்ளவர்களெல்லாம் வருவார்கள். நான் அதில் பேச வேண்டும்" என்றாள்.

போதகர் பணிவோடும் அன்போடும் கூறினார், ''இன்று உங்களைச் சுற்றிலும், நாகரீகமான, படித்த செல்வந்தரின் குடும்பத்தினர் இருக்கிறார்கள். நரகத்தில் உங்களோடு கூட யார் யார் இருப்பார்கள் தெரியுமா?'' என்று கூறி வெளி. 21:8 ஐ திறந்து காட்டினார்.

''பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரக ஆராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்'' (வெளி. 21:8). ''துன்மார்க்கரும், தேவனை மறக்கிறவர்களும் நரகத்திலே தள்ளப்படுவார்கள்'' (சங். 9:17).

இரட்சிக்கப்படாத ஆத்துமாவே, நீ பாதாள நரகத்தில் யார் யாரோடு வாழ வேண்டியதிருக்கும் என்று எண்ணிப்பார்.

முதலாவதாக, பிசாசின் கூட்டங்கள் அங்கு கோடிக் கோடியாய் இருக்கும். அது சாத்தானுக்காகவும், பிசாசின் சேனைகளுக்காகவும் உருவாக்கப்பட்ட இடம் தானே? (மத். 25:31) அவைகள் திரளாய் உன்னைப் பிடித்து நரகக் கடலிலே மூழ்கச் செய்து வாதிப்பார்கள்.

இரண்டாவது, அந்திக் கிறிஸ்து வருவான். அவன் பெயரை வேதம் கேட்டின் மகன் என்றும், பாவ மனுஷன் என்றும் கூறுகிறது. பூமியில் உபத்திரவ காலத்தில் சர்வாதிகாரியாக ஆண்டு ஜனங்களை சித்திரவதைச் செய்யும் இவனை கர்த்தர் தம் வாயின் சுவாசத்தால் அதமாக்கி (II தெச. 2:8) அக்கினிக் கடலிலே தள்ளுவார் (வெளி. 19:20). அவனும் நரகத்திலும் மற்றவர்களை வாதிப்பான்.

மூன்றாவதாக, கள்ளத்தீர்க்கதரிசியும் மிருகமும் வருவார்கள். வேதம் சொல்கிறது, ''அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது. மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும், அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும், மோசம் போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங் கூடப் பிடிக்கப்பட்டான். இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்" (வெளி 19:20). இன்றைய கள்ளத்தீர்க்கதரிசிகளே, ஜாக்கிரதை! பேருக்காக, புகழுக்காக, பணத்துக்காக கள்ளத் தீர்க்கதரிசனம் உரைத்து நரகக் கடலிலே பங்கடையாதீர்கள்!

இன்னொரு கூட்டம் வரும், ''அவர்கள் சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிறவர்" (ரோமர் 1:18). சத்தியம் தெரிந்தும், உபதேசம் தெரிந்தும், தாங்கள் பெறுகிற கூலியாகிய மாதச் சம்பளத்திற்காக அடக்கி வைக்கிறவர்கள். சபைக் கட்டுப்பாடு என்ற பெயரிலே கர்த்தருடைய கட்டளைகளை அவமதிக்கிறவர்கள், அவர்களும் அங்கு வருவார்கள்.

எல்லா வேசிக்கள்ளரும், கொலை பாதகர்களும், அருவருப்பான இச்சையுள்ளவர்களும் அங்கு குழுமிக்கிடப்பார்கள். அவர்களின் மத்தியிலே நீயும் கிடப்பது எவ்வளவு பரிதாபமாக இருக்கும்! சிந்தித்துப்பார். சேரிகளில் ரவுடிகள் இருந்தால் யாரும் அந்த பக்கம் வாடகைக்கு போகவும் மாட்டார்கள்; நிலங்களை வாங்கவும் மாட்டார்கள். பூமியில் கொஞ்ச கால வாழ்க்கையிலேயே, நீ நல்லவர்களோடு படித்தவர்களோடு, நாகரீகமானவர்களோடு வாழ விரும்புகிறாயே, நித்தியத்தில் மட்டும் நரகத்தில் அயோக்கியர்களோடு, பிசாசின் கூட்டத்தாரோடு எப்படி வாழ்வாய்? வேண்டாம்.

இன்றே தீர்மானஞ் செய். கிறிஸ்துவோடு, தேவதூதர்களோடு, பரிசுத்தவான்களோடு பரலோகத்தில் ஜீவிக்க உன்னை பரிசுத்தமாய் ஒப்புக்கொடு!

3. தப்ப முடியாத இடம்:-

பல்லி பூச்சிகளைப் பிடிக்கும்போது அதை ''கபளீ கரணம்'' பண்ணி விடுகிறது. அப்படியே விழுங்கி விடும். அதன் வாயில் பிடிபட்டு எளிதாக தப்பமுடியாது! நரகமும் அப்படிப்பட்ட இடம்தான்.

''இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலை யற்றிருப்போமானால், தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்?'' (எபி. 2:4).

இந்த உலகத்தில் ஒரு கொலைகாரன் லஞ்சம் கொடுத்து தப்பிவிடலாம். திறமையான வக்கீலை வைத்து கேஸ் நடத்தி ஜெயித்து விடலாம். ஆனால் பாதாளத்தின் வாயிலிருந்து தப்புவது எப்படி? ''சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யா திருப்பாரோ?" (ஆதி 18:25).

''அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வரு கிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களை சத்தி யத்தோடும் நியாயந்தீர்ப்பார்'' (சங். 96:13).

நரகம் ஒரு இடம். அதற்கு வாசல்களும், திறவுகோல் களும் உண்டு. நரகத்தில் தள்ள வல்லவர் கர்த்தர் ஒருவரே. அவரே மரணத்திற்கும், பாதாளத்திற்கும் உரிய திறவுகோல் களை உடையவர் (மத் 16:18, வெளி 1:8). அங்கே அக்கி னியும், கந்தகமும் கடல்போல என்றென்றும் கொந்தளித்துக் கொண்டேயிருக்கும். புகை மண்டலம் எழும்பிக் கொண்டே யிருக்கும். புழுக்களும், தேள்களும் மரிக்காமல் அரித்துக் கொண்டே இருக்கும் (மாற்கு 9:44, வெளி 14:11,21,8). அது எத்தனையோ கோடி பேரை விழுங்கினாலும் இன்னும் திருப்தியடையாமல் வாயைப்பிளந்து கொண்டேயிருக்கிறது (நீதி. 27:20, ஏசா. 5:14). அது ஒரு நித்திய ஜெயில்.

நரகம் ''காரிருள்" என்றும், ''புறம்பான இருள்" என்றும், ''எரிநரகம்" என்றும், ''அக்கினிச் சூளை'' என்றும், ''அக்கினிக் கடல்'' என்றும், ''வாதையின் புகை" என்றும், ,'அழுகையும் பற்கடிப்புமுள்ள இடம்'' என்றும் விவரிக்க

பட்டிருக்கிறது. மத் 13:42-50, 18:8-9 வெளி. 14:10,11, 19:22, 20:10, 14:18, 21:8.

இத்தனை பயங்கரமான இடம் என்பதால்தான் இயேசு கிறிஸ்து, இடறலுண்டாக்குகிற கண்களைப் பிடுங்கிப் போட்டாவது, இடறலுண்டாக்குகிற கையைத் தரித்துப் போட்டாவது நரகத்திற்கு தப்பித்துக்கொள் என்று ஆலோசனை கூறுகிறார் (மத் 5:29,30).

சிலர் நரகத்தைக் கேலிசெய்து, நான் நரகத்தில்போட்ட வுடனேயே எரிந்து சாம்பலாய் போய்விடுவேன். அதன்பின் எனக்கு எந்த வேதனையும் இராது! நித்திய ஆக்கினை என்பது பொய் என்கிறார்கள்!

ஆனால் வேதம் நரகக் கடலைக் குறித்து "அந்த அக்கினி அவியாத அக்கினியென்றும், அங்குள்ள புழுக்கள் சாகாத புழுக்கள்" என்றும் கூறுகிறது!

மோசே அன்று முட்செடியைக் கவனித்தார். அதில் அக்கினி எரிந்து கொண்டிருந்தும் அந்த முட்செடி சேதப்பட வில்லையே! சாத்ராக் மேஷாக் ஆபெத்நேகோ அக்கினி சூளையில் போடப்பட்டபோது அவர்கள் அக்கினியால் சேதப் படவில்லையே! இன்னும் தீய சக்தியால் ஆட்கொள்ளப்பட்டு அக்கினியின் மேல் நடக்கிறதையும், தங்கள் மேல அக்கினித் தழலை வாரிப் போடுகிறதையும், அக்கினிச் சட்டி சுமக்கிறதை யும் காண்கிறோமே. தேவனோ, பிசாசோ இருக்குமிடத்தில் நெருப்பு அழிக்கும் தன்மையை இழந்துவிடுகிறது.

4. கூர்மையான ஞாபகமுள்ள இடம்:-

நரகம் நல்ல ஞாபகமுள்ள ஒரு இடம். நரகத்தின் விழுந்த ஐசுவரியவான் உடனே ஆபிரகாமையும், அவன் மடியிலிருந்த லாசருவையும் அடையாளம் கண்டு கொண் டான். மட்டுமல்ல, அவன் தகப்பன் வீட்டிலுள்ள ஐந்து சகோதரர்களைப் பற்றிய ஞாபகமும் உடனே வந்தது!

அந்த ஞாபகம்தான், அனுபவிக்கும் நரகத்தின் வேத னையை பல சடங்கு அதிகமாக்குகிறது பூமியின்! வாழ்க்கை

யையெல்லாம் எண்ணிப்பார்த்து, ஐயோ, தேவன் எவ்வளவு கிருபையாய் தந்த தருணங்களையெல்லாம் புறக்கணித்தேனே என்று கதறியழ வேண்டியதிருக்கும்.

இங்கு பூமியில் கவலையை மறக்க குடிக்கிறார்கள், போதை வஸ்துக்களை உட்கொள்ளுகிறார்கள். ஆனால் நரகத்தில் உன்னை வாட்டும் நினைவுகளை மறக்க என்ன செய்வாய்? அங்கு மயக்க மருந்தோ, பெதடின் இஞ்ஜக்சனோ கிடையாதே!

நீ பூமியில் வாழ்ந்த இளமையை நினைப்பாய். உன்னை பாலூட்டி, சீராட்டி வளர்த்த பெற்றோரை நினைப்பாய். பக்தியாய் ஜீவித்து பரலோகம் சென்று விட்ட சகோதர சகோதரிகளை நினைப்பாய். நீ கேட்ட பிரசங்கங்களை நினைப்பாய். வருகையைப்பற்றி பாடிய பாடல்களையெல்லாம் நினைத்து நினைத்து அழுவாய்.

"காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில் கண்ணீர் விடுவாயோ" என்ற பாடல் எத்தனை கருத்துச் செறிவுள்ளது என்று அன்றுதான் உனக்குத் தெரியும்.

அற்ப மாம்ச இச்சைக்காக உலக நேசத்தை விரும்பியது எவ்வளவு பைத்தியக்காரத்தனம் என்று நினைப்பாய்! அழுகிப் போகும் நாற்றமுள்ள சரீரத்தை அழகு என்று ஓடி படுகுழியில் விழுந்தேனே என்று எண்ணிக் கலங்கிடுவாய். உன்னைச் சூழ சினிமா நடிகைகளும், வேசிகளும், பேய் சிரிப்பு சிரிப்பார்கள்!

ஞானி எச்சரிக்கிறார், "பரஸ்திரீயின் உதடுகள் தேன்கூடு போல் ஒழுகும்; அவள் வாய் எண்ணெயிலும் மிருதுவாயிருக்கும்; அவள் செய்கையின் முடிவோ எட்டியைப் போலக் கசப்பும், இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போல் கூர்மையுமாயிருக்கும்; அவள் காலடிகள் மரணத்துக்கு இறங்கும்; அவள் நடைகள் பாதாளத்தைப் பற்றிப்போகும்.

முடிவிலே உன் மாம்சமும் உன் சரீரமும் உருவழியும் போது நீ துக்கித்து, ஐயோ போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்து கொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்

ணியதே! என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்குஉபதேசம் பண்ணினவர்களுக்கு என்செவியைச் சாய்க்காமலும் போனேனே! சபைக்குள்ளும், சங்கத்துக்குள்ளும் கொஞ்சங்குறைய எல்லாத் தீமைக்குமுள்ளானேனே என்று முறையிடுவாய்" (நீதி 5:3-14).

உன் ஞாபகமே உனக்கு வேதனையாய் மாறும். உன் சிந்தனைகளே உன் இருதயத்தைப் பிழியும். கிறிஸ்துவை புறக்கணித்து நரகத்திற்கு வந்ததை, ஒருபோதும் உன் மனச்சாட்சி மன்னிக்கப் போவதில்லை!

5. நரகம் நம்பிக்கையற்ற இடம்:-

"அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்; நான் மறு உத்தரவு கொடுக்க மாட்டேன்" (நீதி 1:28).

நம்பிக்கையில்லாமல் கூப்பிட்டுக் கொண்டேயிருப்பதினால் என்ன பயன்? பரலோகம் அவர்கள் மேல் கொஞ்சமும் மனதிரங்கப் போவதில்லை! ஆம், நம்பிக்கையற்ற இடம் தான் நரகம்!

இன்று உனக்கு நம்பிக்கை உண்டு! உன் கடைசி மூச்சு உன்னை விட்டுப் பிரியும் வரை உனக்கு நம்பிக்கை உண்டு. இன்று தேவக் குமாரன் உன்னை ஏற்றுக் கொள்ளும்படி ஆவலோடு இருகரம் நீட்டி நிற்கிறார். என்னிடத்தில் வாருங்கள் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்கிறார்(மத் 11:28). இன்று உங்களது பாவங்களற உங்களைக் கழுவ கிறிஸ்துவின் இரத்தம் ஆயத்தமாயிருக்கிறது. உங்கள் ஜெபங்கேட்டு. எந்த உதவியும் செய்ய கிறிஸ்து ஆயத்தமாயிருக்கிறார்!

இன்று உனக்கு நம்பிக்கையுண்டு.

நரகத்திலோ நித்தியமாய் நம்பிக்கையில்லை!

இன்று இயேசு கிறிஸ்து உன் இதயக் கதவைத் தட்டிக் கொண்டே நிற்கிறார்.

"இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்தால், அவனிடத்தில்நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன்" (வெளி 8:20).

அத்தியாயம் 10

நரகத்தில் மாநாடு!

ஒரு பக்தன் வேடிக்கையான கனவு ஒன்றைக் கண்டாராம். அந்தக் கனவில் பாதாளமும் அதிலுள்ள கோடிக்கணக்கான பிசாசுக்களும் அவருக்குத் தெரிந்தது.

அங்கு பிசாசுகளின் தலைவனான லூசிபர் அக்கினி சிங்காசனத்தில் கொலு வீற்றிருந்தான். அவனைச் சூழவும் பிசாசுகள் அதனதன் வரிசையின்படி குறிக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்திருந்தன. ஒரு முக்கியமான காரியத்தைக் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி விவாதிக்கும்படி லூசிபர் அவர்களை அழைத்திருந்தான்.

அவன் சொன்னான், ''கிறிஸ்து பூமிக்கு வரப்போகும் காலம் நெருங்கிவிட்டது. நமக்கு இன்னும் கொஞ்சக்காலம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு மக்களை தீவிரமாய் நரகத்தின் பக்கமாய் இழுக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவாய் இழுக்கவேண்டும். இனி முழு பெலத்தோடும், முழு மூச்சோடும் நாம் வேலை செய்ய வேண்டும்'' என்றான்.

பேய்க் கூட்டங்களெல்லாம், ''சரி, சரி" என்று ஏகோபித்து குரலெழுப்பியது. நரகமெல்லாம் எதிரொலித்தது.

ஒரு முக்கியமான பிசாசு கூட்டத்திலிருந்து எழுந்தது. அது சொன்னது, ''நான் நாத்திக ஆவி, 'கடவுள் இல்லை' என்று அதிக தீவிரமாய் ஜனங்களுக்கு அறிவிப்பேன்'' என்றது.

அதைக் கேட்ட லூசிபர், ''நல்லதுதான், ஆனாலும் இதை தீவிரமாய் செயல்படுத்த முடியாது. வெளிப்பிரகாரமாய் நாத்திகர்களாயிருக்கிறவர்கள், உள்ளத்தில் சிலவேளைகளில் பக்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். கடவுள் இல்லவே இல்லை என்று தொண்டை கிழிய கத்துகிறவர்கள், மரண